ஸ்ரீ:

ஸ்ரீ ஜினாய நம:

அவிரோதி ஆழ்வார் அருளிச்செய்த

திருநூற்றந்தாதி

(மூலமும் - உரையும்)

வெளியிட்டவர் :

ஸ்ரீ ஜைனசித்தாந்த நூல் நிலையம்,
7, சுப்ரமண்ய முதலி தெரு, சென்னை-1.

1955 விலை அணா 12

வெளியீடு 1.

ஸ்ரீ:

ஸ்ரீ ஜிநாய நம:

அவிரோதி ஆழ்வார் அருளிச்செய்த

திருநூற்றந்தாதி

(மூலமும் - உரையும்)

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
2282

வெளியிட்டவர்:

ஸ்ரீ ஜைனசித்தாந்த நூல் நிலையம்,

7, சுப்ரமண்ய முதலி தெரு, சென்னை-1.

1955 விலை அணா 12

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.

மதிப்புரை

திருநூற்றந்தாதி என்னும் இந்நூல் நூறு கலித் துறைகள் அந்தாதியாகத் தொடர்ந்துவர இயற்றப் பெற்ற சிறந்ததோர் நூலாகும். இது சொற்சுவை பொருட்சுவை மிக்கு உடையதாய், அருகக் கடவுளைப் பராவி வருதலின், நம் தமிழ்நாட்டு சமணர்கள் எல்லோராலும் சிறப்பித்துப் போற்றப்படுகின்றது. இதனுடைய அருமை பெருமையை உணர்ந்த எனது பெரிய தந்தை காலஞ்சென்ற C. A. ஜினதாஸ் நயினர் (காஞ்சிபுரம்), அவர்களால் இது தெளிவான பதவுரையுடன் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் அச்சுவாகன மேறிற்று. பிறகு இந்நூல் பழைய பொழிப்புரையுடனும் விசேட வுரையுடனும் ரா. இராகவையங்காரவர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக வெளியிடப்பட்டது.

இந்த நூலின் அருமையையும் பெருமையையும் நோக்கி இது கிடைப்பது கஷ்டமாயிருப்பதையும் உணர்ந்து இதை பதவுரையுடன் மிகவும்அழகாக கருந்தை, பிரம்மசாரி K. A. சூரியகோட்டி என்பார் நன்முயற்சியால், சென்னை ஸ்ரீ ஜைன சித்தாந்த நூல் நிலையத்தாரால் வெளிவந்துளது. வெகு நாட்களாக தமிழ் நாட்டு ஜைனர்களால் எதிர்பார்த் திருந்த இந்த நூல் அவர்களுக்கு பெரிதும் பயன் படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூலுள் அருகக்கடவுள் குணவிசேடங்களும், ஜைன சமயக் கொள்கைகளும், துறவறத்தின் பெருமையும், தவத்தின் மகிமையும், இல்லறத்தின் சிறப்பும் காணப் படுதலின் இது ஜைன சமயத்தவர் அல்லாதவர்களுக் கும், தமிழறிஞர்களுக்கும் உபயோகப்படக் கூடிய தாயிருக்கின்றது. இதனைப் படிப்போர் அனைவரும் பெரிய பயனை அடைவார்களென்று நம்புகின்றேன்.

C. S. மல்லிநாதன்,

3—10—1955. சென்னை-30.

முகவுரை

இத்திருநூற்றந்தாதி என்னும் நூல் ஏறக்குறைய நானூறாண்டுகளுக்கு முன், சென்னை மயிலாப்பூர் என்னுமிடத்தில் வாழ்ந்திருந்த அவிரோதி யாழ்வார் என்ற வைணவப் பெரியாரால் இயற்றப் பெற்றது. அவர் இந்நூலை நூறு செய்யுட்களாகப் பாடிச் செய்தார். ஜைன சமயத்தைப் பிரகாசிக்கச் செய்தவர். இந்நூலை ஏறக்குறைய 80 ஆண்டுகளுக்கு முன், காஞ்சீபுரம் அருகதாஸ் நயினர் குமாரர் ஜினதாஸ் நயினர் அவர்கள் பதவுரையுடன் வெளியிட்டார்கள். பிறகு 1935-ஆம் வருஷத்தில் மதுரைத் தமிழ் சங்கத்தில் ஸ்ரீமான் மகாவித்வான். ரா. இராகவையங்கார் அவர்களால் இந்நூல் பொழிப்புரையுடன் மாத்திரம் அச்சிட்டு வெளிவந்தது. இவை இன்று புத்தக அளவில் பொதுமக்களுக்குக் கிடைக்காமையால் நான் இப்பொழுது பதவுரையுடன் வெளியிட விரும்பினேன். 1940-இல் கரந்தை அகளங்க பாடசாலையில் இந்தி உபாத்தியாயராய் இருந்த நந்தகோபால் என்பவர் இந்நூலைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது கையால் எழுதி ஒரு பிரதியை வைத்துக்கொண்டு அவர் போதித்து வந்தார். அப்போது சில பெரியோர்களை அடுத்து, திருநூற்றந்தாதியை அச்சிற்றுமாறு முயற்சித்து பார்த்தார். எவரும் முன் வரவில்லை. இப்போது நான் அதனை அச்சிடுவதற்கு விரும்பி அவரிடம் போய் விஷயத்தை சொன்னேன். அதற்கு அவர் அன்புடன் உடன்பட்டதோடு தாமே அச்சாபீஸுக்கு வந்து அச்சுக்குக்

கொடுத்து உதவினர்கள். கையெழுத்து மூலப்பிரதி யைப்பார்த்துக் கொடுக்கும் பணியை ஜைன கெஜட்டின் ஆசிரியராயிருந்த ஸ்ரீ C. S. மல்லிநாத நயினர் அவர்கள் அன்புடன் ஏற்றுக்கொண்டு உதவினர்கள். ஸ்ரீநந்தகோபால் அவர்களும் உடனி ருந்து புத்தகம் முழுமையும் புரூப் பார்த்து அது செம்மையாய் வெளிவருவதற்கு வேண்டிய உதவி செய்தார்கள். இவ்விரு நண்பர்களும் எனக்குச் செய்த உதவிக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக் கிறேன். ரத்தினம் பிரஸ் (பிராஞ்சு) மானேஜர் ஸ்ரீ T. N. கண்ணப்ப முதலியாரவர்கள் மிகுந்த கடவுள் பக்தியுள்ளவர்கள். அவர்கள் இந்தப் புஸ்த கத்தைப் படித்து பார்த்து "இது உலகத்திற்கு மிகவும் உபயோகமான புஸ்தகம் இதை நல்ல முறையில் அச்சிடவேண்டும்" என்று அதிக சிரத்தையுடன் அச்சு வேலையை ஏற்றுக் கொண்டு மிகவும் விரைவாகவும் அழகாகவும் முடித் துக் கொடுத்தார். இவருக்கும் என்மனமார்ந்த நமஸ்காரம். இந்நூலில் ஏதேனும் பிழைகள் இருப் பின் தெரியப்படுத்தினல் அன்புடன் ஏற்றுக் கொண்டு மறுபதிப்பில் திருத்தி யமைப்பேன் என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிர்மசாரி— K. A. சூரியகோட்டி

நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியர் சென்னையின் ஒரு பகுதியாகிய மயிலாப்பூர் என்னும் ஸ்தலத்தில் வசித்து வந்தவர். இவர் வைணவ சமயத்தை சேர்ந்தவர், வடமொழியிலும் தமிழிலும் சிறந்த பாண்டித்ய முடையவர். இவர் ஒரு நாள் ஜைனர்கள் வசிக்கும் வீதி வழியாக போய்க் கொண்டிருக்கும்போது, அங்கு நேமிநாத ஸ்வாமி கோவிலில் பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்கும் ஜைனாசாரியர் கூறிய

மோக்ஷமார்கஸ்ய நேதாரம் பேத்தாரம் கர்மபூப்ரதாம்
ஞாதாரம் விஸ்வதத்வாநாம் வந்தே தத்குணலப்தயே

என்ற தத்வார்த்த சூத்திரத்தைப் பிள்ளைகள் சொல்வது இவருடைய செவிகளில்பட்டது. அதனைக் கேட்ட அவிரோதியாழ்வார் தத்குணலப்தயே என்னும் பதத்திற்கு பொருள்விளங்காததினால் கோவிலுக்குள் போய் ஆசிரியரைக் கண்டு வினயத்துடன் அதற்குப் பொருள் விளக்கும்படி பணிவாக கேட்டார். அதற்கு ஆசிரியர் "நம் சமயத்தவர்க்கல்லது ஏனையோர்க்கு இவ்வகை நுணுக்கங்களை உரைக்கலாகாது" எனக் கூறினர். அச்சொற்களைக்கேட்ட அவர் அப்போதே அச்சமயப் பிரவேசஞ் செய்து நேமிநாதர் கோவிலை ஒரு முறை வலம் வருவதற்குள் இத்திருநூற்றந்தாதியைப் பாடி அருளினார் என்பது கர்ண பரம்பரையாக வழங்கி வருகிறது. இந்நூல் அந்தாதி வகையில் முதன்மைபெற்று வித்வான்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ

திருநூற்றந்தாதி

செய்யுண் முதற்குறிப்பகராதி

(இலக்கங்கள் - பாட்டிலக்கங்கள்)

அச்சுமல்லா	21
அடியேனறிவற்	9
அடையுமவருமை	48
அதிசோகமோடய	57
அந்தாமேலொரு	28
அருளோடெழுமற	5
அவஞ்செய்கின்றே	17
அறியோமருந்தமி	73
இச்சிகனே	78
இடரார்பவக்கங்கு	26
இரக்குந்தொழி	37
இருவினைவேலை	67
ஈசனென்றலு	71
எண்ணுடைமாலை	70
எரிதின்றுபோத	96
என்செயலாம்வினை	82
என்னெஞ்சமேயிட	18
என்னையிம்மண்ணுல	65
ஒத்தகலாமதி	4
ஒருத்தமத்தர்கள்	15
ஒளிவந்தநீழ	94
ஒன்றறியீர்முழு	77
ஓர்கின்றிலேயுனை	14
கதமொழிதீர்மின்	52
கந்தாதிகளென்	99
கருந்திரைகாணினும்	60
கற்பகமேகரு	3
காலங்கழிதொறுங்	54
குணதரரே	59
குற்றம்விட்டார்	75
கேவலமுறப்பத்தி	11
கைத்துக்கடிதடுங்	86
கொண்டல்கண்டீர்	2
கொண்மூவொரு	97
சங்கையஞ்சார்	68
சத்தியமே	79
சாமரைசங்கு	44
சிரத்திரணுன்கில	24
சிறப்பின்றிவ்வாழ்	81
சுடர்மண்டலஞ்	80
சுத்தியைத்தானுடை	29
செற்றதுகாதிக	88
சேதியமுப்புவனத்	93
சொல்லார்பிறர்க்	42
தம்பத்தின்மேல்	23
தாங்குவளை	8
தாமரையே	7
தூண்டுதிண்டே	27
தெய்வதம்வேறென்	76
தெளிக்குந்திரு	98
தொல்லறமேபடை	38
தோளாமரச்செவி	10

செய்யுண் முதற்குறிப்பகராதி

(இலக்கங்கள் - பாட்டிலக்கங்கள்)

நற்றவர்க்குச்சித்தி	46	பேராயிரத்திரு	72
நாயகத்தேவர்த	84	பொன்குணமாமணி	36
நிரந்தரநான்மை	32	போலிப்பொரு	33
நினைத்தனையாயி	85	மடங்கலிணாசனம்	30
நின்மாமலாப்பதம்	35	மணியாபரணமு	87
நீசரணாமிடம்	43	மலந்தோய்வயிறு	64
நெறிச்சென்றொரு	58	மாறாமனங்கொண்டு	47
படினும்படார்தவம்	89	மிசையார்தசை	83
பண்ணவனார்	25	முக்குற்றநீக்கிய	74
பத்தர்நற்சித்தனை	69	முத்தனென்கோ	31
பரம்பற்றிநீங்க	49	முத்திற்பொலிகுடை	40
பரித்தமலர்ப்பத	16	முந்தியபேரன்பின்	100
பளகரெல்லாமனை	61	மும்மடிசூழ்ந்த	63
பறந்துபுக்குப்	51	முன்னையென்	12
பாடுவனேசில	56	மொழித்தேனியம்பு	53
பாரிடையீருரி	92	மோகங்களாற்	39
பிணங்கோடுமவ	66	வந்தனவெண்ணரை	95
புகாநின்ற	45	வந்திக்கவும்புகழ	50
புங்கவன்	19	வரையம்புகாயெரி	34
புண்ணியமான	6	வழுவதல்லாவதம்	41
பூக்கொண்டு	1	வாழ்த்துதிநின்	20
பூரணையால்	91	வினைவருமாறு	59
பெயர்த்தன்பர்	22	வீடும் வினைகளின்	62
பெறுவதுமுவல	13	வேடந்தரித்து	50



KARANDAI, BRAHMACHARI

K. A. SURIYAKOTI

[Who has taken BRAHMACHARI VRATHAM,
from His Holiness 108 SREE DHARMASAGARAR of Sholapur
at Sri Sammedasigari's Bheespanthi Koti,
on 27—2—1955]

௨௨௪௨

நமோ ஜிநாய:

திருநூற்றந்தாதி

காப்பு

நேமிநாதர் துதி

'மறமே முனிந்து மயிலா புரிநின்று மன்னுயிர்கட்
கறமே பொழியு மருட் கொண்ட லேயத ரஞ்சிவந்த
நிறமே கரியவொண் மாணிக்க மேநெடு நாளொழித்துப்
புறமே திரிந்த பிழையடி யேனைப் பொருத்தருளே.

(இ - ள்.) மயிலாபுரிநின்று - மயிலையென்னும் ஸ்தலத்திலெழுந்தருளி, மன் - நிலை பெற்றுள்ள, உயிர்கட்கு - ஜீவன்களுக்கு, மறம் - (அவைகளடைந்திருக்கின்ற) பாவத்தை, முனிந்து - ஒழித்து, அறம் - (வீட்டையடைதற் கேதுவாயிருக்கின்ற நல்ல நெறியையுடைய வேத முதலாகிய) நூல்களை, பொழியும் - (உபதேசஞ் செய்தருளிய, அருள் - கிருபையாகிய (நீர்) தங்குதற்கிடமாகிய, கொண்டலே - மேகமே, அதரம் - அதரத்தினிற மாத்திரமே, சிவந்த - சிவப்பு நிறத்தை யடைந்து, நிறம் - (மற்றயவயவங்களின் நிறம் முழுதும், கரிய - கருமையாகிய வண்ணத்தைப் பெற்ற, ஒள் - ஒளிபொருந்திய, மாணிக்கமே - மாணிக்கமணியே, நெடுநாள் - (நற்கருமஞ் செய்தற்கு தவியா யிருந்த பல நாட்களையும், ஒழித்து - வீணாகப் போக்கி, புறமே - விஷயங்களினிடமாக, திரிந்த - மனஞ் சென்றதனாலுண்டாகிய, பிழை - குற்றத்தை

யுடைய, அடியேனை - அடிமையாகிய வென்னை, பொருத்தருள் - ஆண்டருள்க. (எ - று) அருட் கொண்டலே - மாணிக்கமே, எழுவாய்; அடியேனை, செயப்படுபொருள்; பொறுத்தருள் - பயனிலை; மயிலாபுரி யென்பது - மரூஉ வழக்கு.

நூல்

பூக்கொண்டு பொன்னுல கங்கொடுப் பானைப் புலவர்செஞ்சொல்
பாக்கொண்டு முத்தி பணிக்கவல் லானைப்பைங் கோகிலங்கள்
கூக்கொண்டு சேருங் குளிர்பிண்டி யானைக் குணம்புகழ்வான்
மாக்கொண்டல் வீழ்துளி யெண்ணவென் பேய்மன மால்கொண்டதே. 1

(இ - ள்.) பூக்கொண்டு - அன்பர்கள் அர்ச்சனை செய்கின்ற மலர்களைத் திருவுளங்கொண்டேற்று, பொன்னுலகங்கொடுப்பானை - (போகங்களை யனுபவித்தற் பொருட்டு) தேவலோக பதவியை யருள் செய்கின்றவரை, புலவர் - வித்துவான்களுடைய, செஞ்சொல் - (இலக்கண அமைதி பொருந்திய) சொற்களாற் றொடுக்கப்பட்ட, பாக்கொண்டு - பாடலை யேற்றுக்கொண்டு, முத்தி - முத்தியை, பணிக்க வல்லானை - அருள் செய்ய வல்லவரை, பைங்கோகிலங்கள் - அழகிய குயில்கள், கூக்கொண்டு - கூவிக் கொண்டு, சேரும் - சேர்ந்து வாழும், குளிர்பிண்டியானை - குளிர்ச்சிக்கிடமாகிய அசோக விருட்சத்தை யுடையவரை, குணம் புகழ்வான் - (அவரது அனந்த ஞான முதலிய எண்) குணங்களையும் புகழும்படியாக, என் - அடியேனுடைய, பேய் - மயக்கங்கொண்ட, மனம் - மனமானது, மால் கொண்டது - ஆசைப் பட்டது, மாக்கொண்டல் - பெரியமேகத்தினின்றும், வீழ் - வீழா நின்ற, துளி - நீர்த்துளிகளை, எண்ணல் -

(இவ்வளவென்று) எண்ணியளவேற்படுத்தல் போலும் - (எ - று), மால் கொண்டது - எழுவாய். துளியெண்ணல் - பயனிலை; போலும், என்பது; வருவிக்கப்பட்டது.

சுவாமியை ஆத்மார்த்தமாக அர்ச்சனை செய்பவர்க்கு மிக்க கல்வியும் ஞானமும் சாலவேண்டாவாதலால், அவர்க்குப் பொன்னுலகமும், பிறந்திறக்கும் வரிசையினையுடைய மனிதர் விஷயத்திலன்றிக் கடவுள் விஷயமாகவே பாடுவோர் கல்வியோடு ஞானமும் முதிர்ந்தோராதலால், அவர்க்கு மோட்சமும் கூறப்பட்டன. கர்மங்களை யெல்லாம் க்ஷயஞ் செய்தவர் பெறும் வீடு, பாடினவர், பெறுவரென்பது, மலர் பிஞ்சு, காய், கனி யென்னும் பரிணும பரம்பரையால் பெறப்பட்டது. சுவாமி வீற்றிருக்கும் அசோகில் குயில்களில்லாவேனும் விருக்ஷங்களுக்குக் கூறும் இயற்கையடை சிறப்பித்தற்பொருட்டு வந்தது. மாவிலிருக்குங் கோகிலத்தைப் பிண்டியிலிருப்பதாகக் கூறலாமோ வெனின் மாவும் அசோகும் மன்மதனுக்குக் கணையாக மலரைக் கொடுத்தலானும், மாதர் மேனிக்கு உவமையாக அசோகந்தளிர் மாந்தளிரையே கூறுதலானும் இவ்விரண்டும் ஒருங்கே வசந்த காலத்தின் கண்ணே தளிர்விடுதலானும் அக்காலத்தில் தளிரைக் கோதித்தின்றல் குயிலுக்கியற்கையாதலால் இதனிடத்துந் தங்கியிருத்தல் கூறலாமென்க. குளிர்பிண்டி - பாபமாகிய வெப்பத்தை நீக்கிக் குளிர்விக்கும் பிண்டி; மாக்கொண்டல் - ஊழிக்காலத்தி லிடைவிடாமல் பெய்யும்படி

மிகவும் நீருருக்கொண்டமேகம். துளியென்பதற்கு இவ்விடத்தில் பிண்டி மழையெனப் பொருள் கொள்க. பெரியமேகத்தின் துளிகளை வரையறுத்தல் கூடாமைபோல சுவாமியின் குணங்களும் வரை யறைப்படுத்தக் கூடாவெனத் தெரிந்துகொள்ளும் உணர்வுயில்லாமற் புகழப் புகுந்தேனென்பார் "பேய்மனம்" என்றார் - பேய்மனம் விபரீதத்தை யடைந்தமனம்; பித்துபிடித்தமன மெனப் பொருள் கூறினும் பொருந்தும். தான் விரும்பிய ஒரு பொருளை யடைகிறதற்குச் சகல முயற்சிகளைச் செய்தும் கிட்டாதாயின் அதனுடைய நினைப்பே மேலிட்டு ஒருவனுக்கு வெறிபிடிக்கும், அதுபோல கடவுளின் பொருட்டுத் தமக்குப்பித் தேறிய தென் பார். "பேய்மனமால் கொண்ட தென்று" றென் பதும் ஒரு பக்ஷம்.

கொண்டல்கண் டீர்கொடை குன்றுகண் டீர்புய மென்றுகொண்டே
தொண்டர்கண் டாரையெல் லாந்துதி யாவண்ண ந் தொல்லுலகிற்
பண்டுகண் டேயறி யாப்பொரு ளீயவென் பாக்கியத்தாற்
கண்டுகொண் டேன்பிண்டி நீழலின் கீழொரு கற்பகமே. 2

(இ - ள்.) கண்டாரையெல்லாம் - சாதாரண மானவர்களை யெல்லாம், கொடை - ஈகையால், கொண்டல் கண்டீரென்று - மேகமே யெனவும், புயம் - தோள்கள், குன்று கண்டீரென்று - மலை களே எனவும், கொண்டு - (கற்பித்துச் சொல்லும் வார்த்தைகளைக்) கொண்டு, தொண்டர் - அடிமைகள் போல, துதியாவண்ணம் - புகழாதிருக்கும்படி, தொல்லுலகில் - பழமையாகிய உலகத்தில், பண்டு - முன்புவோர் காலத்திலும், கண்டறியா - பார்த்தறி

யாத, பொருள் - மோக்ஷத்தை, ஈய - கொடுக்க, என் பாக்கியத்தால் - அடியேனது சத்கர்ம பரிபாகத்தால் பிண்டி நிழலின் கீழ் - அசோக விருட்சத்தினிழலின் கீழ், ஒரு - ஒப்பற்ற, கற்பகம் - கற்பகத்தை, கண்டு கொண்டேன் - தெரிந்துகொண்டேன் (எ - று). நான் - எழுவாய்; கற்பகம் - செயப்படுபொருள்; கண்டுகொண்டேன், பயனிலை. கண்டீரென்பது. தேற்றப்பொருளில் வந்த, இடைச்சொல் - தொண்டர்போலவென, உவமைச்சொல் விரிக்க.

கற்பக மேகரு ணைக்கட லேகடல் போற்குணத்தெம்
பற்பத மேபக டிப்பகை வாபர வைப்புனன்மேற்
புற்புத மேயன்ன பொய்க்குடி வாழ்க்கையைப் போகவிட்டுன்,
னற்பத மேயடை ந் தேன்சும ந் தேகு நளினமொத்தே. 3

(இ - ள்.) கற்பகமே - வேண்டியவற்றைத்தருங் கற்பகமே, கருணை - கிருபைக்கு, கடலே - சமுத்திரமே, கடல்போல் - சமுத்திரம்போல் (கம்பீரமாகிய) குணம் - (அனந்த ஞானாதி) குணங்களையுடைய, எம் - எமது, பற்பதமே - ஆதாரமாகிய மலையே, பகடி - பிரகிருதியாகிய எண்வகை வினைகளுக்கும், பகைவா - சத்துருவே, பரவை - பரத்தலையுடைய, புனல்மேல் - நீரிற்றோன்றிய, புற்புத மேயன்ன — குமிழிக்குச் சமானமான, பொய்க்குடி - நிலையாமையே குடி கொண்டிருக்கிற, வாழ்க்கையை - இம்மைச் செல்வத்தை, போகவிட்டு - முழுதும் விட்டு, உன் - உனது நற்பதம் - நல்ல திருவடிகளை, சுமந்து - தாங்கி, ஏகும் - நடவா நின்ற, நளினம் - தாமரை மலரை, ஒத்து - ஒப்பாகி, அடைந்தேன் - நிலையாகிய செல்

வத்தைப் பெறுதற்கு அடைந்தேன். (எ - று) நான் - எழுவாய்; நற்பதம் - செயப்படுபொருள்; அடைந்தேன் - பயனிலை. பர்வதம் - பற்பதமெனவும், பிரகிருதி பகடியெனவுந் திரிந்தன - பொய்க்குடி வாழ்க்கை யென்று பாடங்கூறி, நிலையில்லாத தேகத்திலிருந்து வாழ்தலை யென்று பொருள் கூறுவாருமுளர். இதனால் ஜனனமரணப் பிரவாகத்தை யுடைய இம்மைச் செல்வத்தை வெறுத்தாராயிற்று.

ஒத்த கலாமதி யொன்றிரண் டொக்குமொண் பொற்குடைக்கீ
ழத்தகல் யாணமொ ரைந்துடை யாயடி யோமினுமெய்ப்
பத்தர்க ளாயுனைப் பற்றிநின் றேவினைப் பற்றறுக்கு
மெத்தர்க ளோபெறு வாரிறை வாநின தின்னருளே. 4

(இ - ள்.) ஒத்து - பரிமாண முதலியவற்றில் ஒத்து, அகலா - நீங்காத, ஒன்றிரண்டுமதி - மூன்று சந்திரரை, ஒக்கும் - ஒப்பாகிய, ஒள் - ஒளி பொருந்திய, பொற்குடைக்கீழ் - பொன் முதலியவை களாற் செய்யப்பட்ட (முக்) குடைகளின் கீழ் (வீற்றிருக்கும்), அத்த - சுவாமியே, கல்யாண மோரைந்து - பஞ்ச கல்யாணத்தை, உடையாய் - உடையவரே. அடியோமினும் - அடியாராகிய வெம்மைப் பார்க்கிலும், மெய்ப் பத்தர்களாய் - உண்மையான அன்பராகி, உனை - உம்மை, பற்றி - வழிபட்டு, நின்று ஆகம வழியில் நின்று, வினைப்பற்று - கருமத்தின் வலியை, அறுக்கும் - கெடுக்கின்ற, எத்தர்களோ - விரகர் மாத்திரமோ, இறைவா - நாதரே, நினது - உம்முடைய, இன் - இனிமையாகிய, அருள் - கிருபையை, பெறுவார் - அடைவார்கள், (எ - று).

எத்தர்கள் - எழுவாய். இன்னருள் - செயப்படு பொருள். பெறுவார் - பயனிலை. கல்லியாணம் ஐந்தாவன - (1) சொர்க்காவதரணம், (2) மந்த்ராபிஷேகம், (3) மஹாப் பிரஸ்தானம், (4) கேவலோத்பத்தி, (5) பரி நிர்வாணம்.

அருளோடு எழுமற வாழியப் பாபிற வாழியிற்பா
இருள் ஓவிய கரை ஏறவுய்ப் பாயிந்தியங்களென்னு
மருளோடு உழலும் மனத்து என்னை ஆட்கொண்ட மற்று உனக்குப்
பொருளோ புவனங்கள் மூன்றையும் ஆட்கொள்கை புண்ணியனே. 5

(இ - ள்.) அருளோடு - கிருபையோடு, எழும் எழுகின்ற, அறவாழி - தர்மச் சக்கரத்தையுடைய, அப்பா - ஆண்டவரே, பிறவாழியில் - (பொருளும், இன்பமுமான) கடலுல், பாய் - விழுகிறதற்குக் காரணமாயிருந்த, இருள்-அக்கியானமானது, ஓவிய - நீங்க, கரை - முத்தியாகிய) கரையை, ஏறவுய்ப்பாய் - அடையச் செலுத்துவீர், இந்தியங்களென்னும் - இந்திரியங்களென்று சொல்லப்பட்ட, மருளோடு - மயக்கத்துடனே, உழலும் - உழலா நின்ற, மனத்து - மனத்தையுடைய, என்னை அடியேனை ஆட்கொண்ட - அடிமையாகக்கொண்ட, உனக்கு - உமக்கு, புவனங்கள் மூன்றையும் - மூன்றுலகத்தையும், ஆட்கொள்கை - அடிமையாகச் செய்துக் கொள்ளுதல், பொருளோ - ஒரு பொருளோ, புண்ணியனே - புண்ணியச் சொரூபியே - (எ - று), அறவாழியப்பா - எழுவாய் - என்னை - செயப்படுபொருள், ஏறஉய்ப்பாய் - பயனிலை - ஆட்கொள்கை - எழுவாய்

பொருளோ - பயனிலே, என்னை - அடிமைக்கொண் டதே அரிதென்பதாம். மற்று - அசை.

புண்ணிய மானசெம் பொற்றளை போலப்பொல் லாவினையாற்
பண்ணிய பார விருப்புத் தளைபரிந் தேறவுய்த்தற்
கண்ணிய வெங்கதிர்க் காந்தங்கண் டீர்கதிர் மாமதிபோற்
றண்ணிய வான்குடை மூன்றுடை யானடித் தாமரையே. 6

(இ - ள்) கதிர் - கிரணங்களையுடைய, மா, பெருமை பொருந்திய, மதிபோல் - சந்திரன்போல - தண்ணிய - குளிர்ச்சிபொருந்திய, வான் - மேலாகிய, குடைமூன்றுடையான் - முக்குடைகளையுமுடைய அருகதேவரது அடித்தாமரை - தாமரை மலர் போன்ற திருவடிகள், பொல்லா வினையால் - மகத் தாகிய துஷ்க்கர்மத்தால், பண்ணிய - உண்டாக்கப் பட்ட, பாரம் - பாரத்தையுடைய, இருப்புத்தளை போல் - இரும்பு விலங்கினைப்போலவே, புண்ணியம் - புண்ணியத்தால், ஆன - உண்டாகிய, செம் - செய்ய, பொற்றளை - பொன்விலங்கையும், பரிந்து - அறுத்து, ஏற - முத்தியை அடைய, உய்த்தல் - செலுத்தற்கு, கண்ணிய - நினைக்கப்பட்ட, காந்தங்கண்டீர் - காந்த மாகும்.........................(எ - று). அடித்தாமரை - எழுவாய், காந்தமாகும் - பயனிலே. போல என் பதை இருப்புத்தளையோடு சேர்க்க. தீவினையால் கடைப்பட்ட பிறவிகளை யெடுப்பது, தீராப்பிணி யடைதல், தரித்திர முறுவது முதலாகியவற்றைப் பொல்லாவினையால் பண்ணிய விருப்புத்தளை யென் றும், தேவர்களாகப் பிறப்பது, மிகுந்த செல் வத்தை யடைவது, நோயின்றி வாழ்தல் முதலான வற்றைப் பொற்றளை யென்றும் கூறியதாம்.

கண்டீர் - முன்னிலை அசை

தாமரை யேயெத் தவங்கள்செய் தாய்சக மூன்றினுக்குந்
தாமரை சேயென்று சாற்றுவ போலுமுச் சத்திரத்துத்
தாமரை சேர்திரு வைத்திரு மார்பிற் றரித்தவர்செந்
தாமரை யேய்சர ணந்தலை மேற்கொண்டு தாங்குதற்கே. 7

(இ - ள்.) சகமூன்றினுக்கும் - மூவுலகத்திற்கும், தாமே - இவர் தாமே, அரைசென்று - தலைவரென்று, சாற்றுவ போலும் - சொல்வன போன்று தோன்றுகின்ற, முச்சத்திரத்து - முக்குடையினையுடைய, தாமரைசேர் - தாமரை மலரில் வீற்றிருக்கும், திருவை - மோக்ஷ லக்ஷ்மியை, திரு - அழகிய, மார்பில் - மார்பிடத்தில், தரித்தவர் - தரித்த சுவாமியினுடைய, செந்தாமரை - செவ்விய தாமரை மலரை, ஏய் - ஒத்த, சரணம் - பாதங்களை, தலைமேல், அக்கிர பாகத்தில், கொண்டு - ஏற்றுக்கொண்டு, தாங்குதற்கு - சுமப்பதற்கு, தாமரையே - தாமரை மலரே, எத்தவங்கள் செய்தாய் - எப்படிப்பட்ட தவங்கள் செய்தாய் - (எ - று). பூவுலக முழுதும் புரந்த அரசருக்கு ஓர் கொற்ற வெண்குடையே விருதாக வுடைய வழக்கம்பற்றி மூவுலகுங் காப்பவர்க்கு மூன்று குடைகள் வேண்டுமாதலின், சுவாமியினது திருமுடிமேல் நிழற்றுகின்ற மூன்று குடைகளையும் மூவுலகத்திற்குந் தலைவரென்று உணர்த்துவனவாகத் தற்குறிப்புச் செய்தார். திருவடியைத் தாங்குதற்குத் தாமரையே எத்தவங்கள் செய்தாயென்ற அளவே யாயினும் அவ்வாறு செய்திலே னெனக் குறிப்புத் தோன்றிற்று. தாமரையே - எழுவாய் - எத்தவங்கள் செய்தாய் - பயனிலை.

தாங்கு வளைக்கரச் சக்கர வாழ்வொடத் தாமரைமேற்
பூங்கு வளைக்கண்ணி னுளொடு புல்லுடன் போர்த்தகொண்மூ
நீங்கு வளைத்திகழ் நீள்சுடர் போல்வினை நீங்கலும்புக்
காங்கு வளைத்தவெம் மூவொளி யான்மெய் யடியவர்க்கே. 8

(இ - ள்.) வளை - கடகத்தை, தாங்கு - தரித்த, கரம் - கைகளையுடைய, சக்கரர் வாழ்வொடு - சக்கர வர்த்திகள் செல்வத்தோடு, தாமரை மேல் - தாமரை மலரிலிருக்கின்ற, பூங்குவளை - நீலோற்பல மலர் போன்ற, கண்ணினுளொடு - கண்களையுடைய திரு மகளாலுண்டாகும் நிறைந்த செல்வமும், புல் - அற்ப மாகும். உடன் - ஒருங்கே, போர்த்த - மறைத்த, கொண்மூ - மேகமானது, வளை - வளைத்தல், நீங்கு - நீங்குதலால், திகழ் - விளங்கா நின்ற, நீள் - மிகுந்த, சுடர்போல் - காந்தியையுடைய சூரியன்போல், வினை - எண்வகை வினையும், நீங்கலும் - நீங்கின வளவில், புக்காங்கு - புகுந்து அப்பொழுதே, வளைத்த - சூழ்ந்த, வெம் - விருப்பமான, மூவொளி யான் - பிரபாவலய மூன்றினையுமுடைய சுவாமி யினது, மெய் - மெய்மையாகிய, அடியவர்க்கு - அன் பர்க்கு, (எ - று). பூங்குவளைக் கண்ணினுள் - ஆகு பெயர். அவளாலுண்டாகுஞ் செல்வத்தை அவ் விடத்துச் சொல்லவேண்டியதாகலின், புல்லுடன் ஆம் வருவிக்க. எண்வகை வினையாவன - ஞானவர ணீயம், தர்சனுவரணீயம், வேதநீயம், மோஹநீயம், நாமம், கோத்திரம், ஆயுஷ்யம் - அந்தராயம்.

அடியே னறிவற் கழகிய வாதவ மாடகமாங்
கொடிசேர் நிரைமதிற் கோபுரக் கோயிற்குற் றேவல்செய்ய
முடிசே ரமர்கண் மொய்த்தெங்கு நிற்பர்சொர்க் கங்குனிப்பார்
தொடிசேர் புயத்துச் சுரேந்திரர் சேர்பணைத் தோளியரே. 9

(இ - ள்). அடியேன் - என்னுடைய, அறிவற்கு - சுவாமிக்கு, ஆடகம் - பொன்னால், ஆம் - ஆகிய, கொடிசேர் - கொடிகள் கட்டிய, நிரை - வரிசையா யிருக்கின்ற, மதில் - மும்மதிலையும், கோபுரம் - கோபுரத்தையுமுடைய, கோயில் - கோவிலில், குற்றேவல் - சிறிய ஏவலை, செய்ய - செய்தற்கு, முடி - மகுடங்களை, சேர் - தரித்த, அமரர்கள் - தேவர்கள், மொய்த்து - நெருங்கி, எங்கும் - எவ்விடத்தும், நிற்பர் - சமயம் பார்த்து நிற்பார்கள், தொடிசேர் - வாகுவலயம் அணிந்த, புயத்து - புயங்களையுடைய, சுரேந்திரர் - தேவேந்திரர்களை, சேர் - அணையாநின்ற, பணை - மூங்கில்போன்ற, தோளியர் - தோள்களையுடைய இந்திராணி முதலிய மாதர்கள், சொர்க்கம் - (பேரின்ப விஷயமான அபினயத்தோடு கூடிய) நடனத்தை, குனிப்பார் - செய்வார்கள் ஆதலால் தவம் (சுவாமியினுடைய) தவமகிமையானது, அழகியவா - நன்றாயிருந்தது - (எ - று).

தோளா மரச்செவித் தூரா வயிற்றுச் சுமடர்க்கெல்லாம்
வாளா விருக்க வரந்தரு மோவஞ்ச மற்றநெஞ்சோ
டாளா னவர்க்கல்ல தாயிரக் கண்ணம ரேந்திரர்க்குங்
கேளா முதற்பொருள் கேட்டார்க் குரைக்குமெங் கேவலியே. 10

(இ - ள்). ஆயிரக்கண் - ஆயிரங் கண்களையுடைய, அமரேந்திரற்கும் - தேவேந்திரனுக்கும்,

கேளா - கேள்வியில்லாத, முதற்பொருள் - ஜீவா திபதார்த்தங்களை, கேட்டார்க்கு - பன்னிரு கணத் தார்க்கும், உரைக்கும் - உபதேசித்தருளிய, எம் - எம்முடைய, கேவலி - சுவாமியானவர், வஞ்சமற்ற - குற்றமற்ற, நெஞ்சோடு - மனத்தோடு, ஆளானவர் கல்லது - அடிமையானவர்க் கல்லாமல், தோளா - (தர்மத்தின் கேள்வி புகுதாமையால்) மரம்போல் (சுரோத்திரேந்திரியமற்ற), செவி - காதினையும், தூரா வயிறு - (எவ்வளவுண்டும்) நிறையாத வயிற்றினையு முடைய, சுமடர்க்கெல்லாம் - மூடர்க்கெல்லாம், வாளாவிருக்க - அவர்கள் சும்மாவிருக்க, வரம் - வரத்தை, தருமோ - கொடுப்பரோ - (எ - று) ஜீவாதிபதார்த்தங்களாவன, ஜீவபதார்த்தம், அஜீவ பதார்த்தம், புண்ணிய பதார்த்தம், பாபபதார்த்தம் ஆஸ்ரவபதார்தம், பந்தபதார்த்தம், ஸம்வரபதார்த் தம், நிர்ஜரபதார்த்தம், மோக்ஷ பதார்த்தமாம். பன்னிரு கணமாவன, ரிஷிகள், தேவஸ்த்ரீகள், ஆர்யாங்கனைகள், ஜோதிஷ்கஸ்த்ரீகள், வியந்தர ஸ்த்ரீகள், பவனஜஸ்த்ரீகள், பவணவாஸிகர், வியந் தரர், ஜோதிஷ்கர், கல்பவாசியர், சக்ரவர்த்தி முத லான நரவரர்கள், திரியக் நிவஹம் எனவாம், கேள் - சுற்றம், தார் - ஒழுங்கு. சுற்றத்தின் ஒழுங்கென்ற மையால் - அடியார் கூட்டமெனப் பொருள் பெற் றோம். வயிறுபுடைக்க உண்டு - பசிபோக்கி. சுவாமி யைத் தியானஞ் செய்யாது - அல்லும் பகலும் தின் றிக்கே தேடியுழல்வாரைத் தூராவயிற்றினரென்று சொன்னார்.

கேவல முற்பத்தி யாமள வேகிளர் பூசனைக் கென்
றேவலி யற்றுமவ் விந்திர னுக்குமுன் னெண்குணத்தெங்
காவல னைக்கவிப் பார்வளைப் பார்முளைப் பார்களைப்போல்
மூவுல கத்துள்ள நால்வகைத் தேவரு முன்னுவரே. 11

(இ-ள்.) எண்குணத்து - எட்டு குணங்களை யுடைய, என்காவலனை - என்னைக் (காப்பவராகிய) சுவாமிக்கு, கேவலம் - கேவல ஞானமானது, உற்பத்தியானளவே - அவர்க்கு உதித்த பொழுதே, கிளர் - பிரகாசியா நின்ற, பூசனைக்கென்று - பூசை செய்வதற்காக, ஏவல் - கட்டளை, இயற்றும் - இடுகின்ற, அவ்விந்திரனுக்கு - அச்சௌதர்மேந்திரனுக்கு, முன் - முன்னே, கவிப்பார்போல் - மொய்த்துக் கொள்பவர் போலவும், வளைப்பார்போல் - வளைப்பவர்போலவும், முளைப்பார்களைப்போல் - தோன்றுகின்றவர்களைப் போலவும், மூவுலகத்து - (மேலுலகம், மத்திமலோகம், பவணலோகம், என்னும்) மூன்றுலோகத்திலும், உள்ள உள்ளவராகிய, நால்வகைதேவரும் - (பவணர், வியந்தரர், ஜோதிடர், கற்பவாசிகர், என்கின்ற) நால்வகைத் தேவரும், முன்னுவர் - அடைகுவர்.

முன்னையென் வல்வினை போக்கிமுக் குற்றத்தை நீக்கிமுத்தி
பின்னையு நல்க வமையும் பெரும பிறப்பறுத்த
உன்னையு மென்னையு மன்றிமற் றென்றுமுள் ளாமலுள்ளந்
தன்னையு நின்னருள் போல்வச மாக்கித் தரப்பெறினே. 12

(இ-ள்.) பிறப்பு - ஜனனத்தை, அறுத்த - ஒழித்த, பெரும - பெருமானே, உன்னையும் - உம்மையும், என்னையும் - அடியேனையும், அன்றி - அல்லா

மல், மற்றொன்றும் - வேறொன்றையும், உள்ளாமல் - நினையாதபடி, நின்னருள்போல் - நீரருள் செய்வது போலருள் செய்ய, உள்ளந்தன்னையும் - என்னெஞ்சினையும், வசமாக்கி தரப்பெறின் - தரவல்லீராகில், முன்னை - பூர்வ ஜன்மத்தில் செய்த, என் - அடியேனுடைய வல்வினை - வலிய வினைகளை, போக்கி - நீக்கி, முக்குற்றத்தை - இம்மையி லுண்டாயிருக்கின்ற, காமம், வெகுளி, மயக்க மென்கிற மூன்று குற்றங்களையும், நீக்கி - அறுத்து, முத்தி - முத்தியை, பின்னை - பிற்காலத்தில், நல்கவும் - கொடுத்தாலும், அமையும் - போதும் - (எ - று).

பெறுவது மூவுல காளும் பெருமை யருமைபொய்ம்மை
தெறுவது நாதனைச் சிந்திப் பதுசிறு முள்ளிமொய்க்கு
மறுபத மாமென வைம்புலன் மேல்விழுந் தாவதங்கட்
குறுவது மேது முருததும் பேதைக ளோர்கிலரே. 13

(இ - ள்.) பெறுவது - (ஒருவனுலகிற்) பெறும் பயனாவது, மூவுலகாளும் பெருமை - மூன்றுலகத்தையும் ஆளத்தக்க பெருமை (பெறுவதே யாகும்) அருமை - (அதை யடைகிறதற்கு) அரிய காரணமானது) பொய்ம்மை தெறுவது - பொய் சொல்வதை யொழிப்பதும், நாதன் - இறைவனை, சிந்திப்பது - தியானஞ் செய்வதுமாம், பேதைகள் - அறிவில்லாதவர்கள், சிறு - சிறிய, முள்ளி - முள்ளிப் (பூவினுள்ள தேனுக்கு விரும்பி) மொய்க்கும் - மொய்க்கின்ற, அறுபதமாமென - வண்டுபோல, ஐம்புலன்மேல் - (சிற்றின்பத்தை விரும்பி) ஐந்து விஷயங்களின் மேலும், விழுந்து - மனம் செல்லஆசை கொண்டு,

தங்கட்கு - தங்களுக்கு, ஆவ - நன்மையுடையனவாக, உறுவதும் - அடைவதும், ஏதும் - எவ்வளவும், உறாததும் - அடையாததும், ஓர்கிலர் - அறிகிலர் - (எ - று.)

ஓர்கின் றிலையுனை யோனிக டோறும்பல் லூழியுய்த்து
மார்கின் றிலையின்னு மாசைநெஞ் சேயினி யந்தகனார்
சார்கின்ற போதுனக் குச்சர ணார்சொல்லுந் தாமரைப்போ
தூர்கின்ற பாதரல் லாலுரி யார்மற் றொருத்தரையே. 14

(இ - ள்.) நெஞ்சே - மனமே, ஓர் கின்றிலை - (மரணம் நிச்சயமாயிருப்பதை) அறிகின்றாயில்லை, உன்னை - உன்னை, யோனிகடோறும் - (நால் வகை) யோனி கடோரும், பல்லூழி - அநேக வூழிக்காலம் வரைக்கும், உய்த்தும் - (வினையான்து செலுத்த) அனுபவித்தும், இன்னும் - இன்னும், ஆசையார் கின்றிலை - ஆசைக்குத் திருப்தி உண்டாக்கினாயில்லை, இனி - இனிமேல், அந்தகனார் - எமனானவன், சார் கின்றபோது - (உன்னை பிடித்துக் கொள்ள) வந்த போது, உனக்கு - உனக்கு, உந்தா - நிலத்திற் (செல்லச்) செய்யாமல், மரைப்போது - தாமரை மலரில், ஊர்கின்ற - நடக்கின்ற, பாதர் - (மலர் போன்ற திருவடிகளையுடைய) அருகக்கடவுள், அல்லால் - அல்லாமல், சரண் - துணை, ஆர் - எவர், உரியார் - (அவரல்லது) உரியா ருளராயின், மற் றொருத்தரை - மற்றொருவரை, சொல் - சொல்க (எ - று).

ஒருத்தரு மத்தர்கள் போலுண ராருயி ரோம்புமெங்க
டிருத்தரு மத்தரல் லாச்சிறு மானிடர் சேர்ந்தவர்க்குத்
தருத்தரு மத்தரை யோடுவிண் ணோர்பதந் தந்துபின்னு
மருத்தரு மத்தரை யாதிபட் டாரக ராம்பரிசே 15

(இ - ள்). சேர்ந்தவருக்கு - தம்மையடைந்தவர்க்கு, தரு - கற்பக தருவைப் போல, தருமத்தரையோடு - நரேந்திரபதத்தோடு, விண்ணோர்பதம் - தேவேந்திரபதத்தையும், தந்து - கொடுக்கப்பட்டு, பின்னும் - பின்பும், அரு - அருமையாகிய, தருமத்தரை - சித்தபதத்தில், ஆதிபட்டாரகராம் - ஆதிதீர்த்தர்களாகின்ற, பரிசு - கொடைப்பேற்றினை, உயிர் - எப்படிப்பட்டவுயிர்களையும், ஓம்பும் - காக்கின்ற, எங்கள் - எம்முடைய, திருத்தருமத்தரல்லா, ஜினதர்மத்துள்ளாரல்லாத, சிறு - அற்பமாகிய, மானிடர் - மனிதர், ஒருத்தரும் - ஒருவரும், மத்தர்கள்போல் - பித்தர்கள் போல, உணரார் - அறியார் :—(எ - று).

பரிந்த மலர்ப்பதத் தாருருக் கொண்டுபைந் தோலுநஞ்சு
முரித்துமிழ் சற்ப மெனத்துற வார்தொண்ட ரோங்குலகை
யரித்து மளித்து மழிப்பவ ராதரென் றுபரணந்
தரித்து முடித்துந் தவஞ்செய்கு வாரொத் தவஞ்செய்வரே 16

(இ - ள்). மலர் - புஷ்பங்களால், பரித்த - தாங்கப்பட்ட, பதத்தார் - திருவடிகளையுடைய ஜிநேந்திரரது, உரு - வேஷத்தை, கொண்டு - தரித்து, பை - பசுமையாகிய, தோலும் - தோலினையும், நஞ்சும் - விஷத்தையும், உரித்து-உரித்து, உமிழ்-உமிழ்ந்துவிடுகின்ற, சர்ப்பமென - பாம்புபோல, துறவார் - (உட்பற்று, புறப்பற்றுவிடத்) துறவாதவர்களாய், தொண்டர் -

அரித்தல் - படைத்தல்

அடியார்கள், ஓங்கு - உயர்ந்த, உலகை - உலகங்களை, அரித்தும் - படைத்தும், அளித்தும் - காத்தும், அழிப்பவர் - அழிப்பவர்களை, அத்தரென்று - கடவுளென்று, ஆபரணம் - (அவர்க்கடியார்) ஆபரணங்களை, தரித்தும் - தரித்துக்கொண்டும், உடுத்தும் - உடுத்திக்கொண்டும், தவஞ் செய்வாரொத்து - தவஞ் செய்வார் போன்று, அவஞ் செய்வர் - வீணன காரியத்தைச் செய்வார் - (எ - று) பாம்பு புறத்துள்ள தோலை உரித்தல் புறப்பற்று விடுதற்கும், நஞ்சை யுமிழ்ந்து விடுதல் அகப்பற்று விடுதற்கும் உபமானமாயின. உடுத்து மென்றதனால் ஆடை வருவிக்கப் பட்டது.

அவஞ்செய்கின் றேனென் றறிகின்ற தேயில்லை யந்தமில்லாச்
சிவஞ்செய்கின் றனெங்க டீர்த்தப் பிரான்றிரு வாய்மொழிந்த
தவஞ்செய்கின் றயில்லைத் தானஞ்செய் தாயில்லை நீநடுவே
யெவன்செய்கின் றயிந் தியஞ்சொன்ன வாசெய்யு மென்னெஞ்சமே. 17

(இ-ள்.) அவம் - பயனற்ற செய்கையை, செய்கின்றேனென்று - பண்ணுகிறேனென்று, அறிகின்றதேயில்லை - அறிகின்றாயில்லை, அந்தமில்லா - முடிவில்லாத, சிவம் - நன்மையை, செய்கின்றான் - செய்கின்றவராகிய, எங்கள் - எம்முடைய, தீர்த்தப் பிரான் - சுவாமியினது, திரு - அழகிய, வாய் - வாயினாலே, மொழிந்த - அருளிச் செய்யப்பட்ட, தவம் - துறவறத்தை, செய்கின்றாயில்லை - செய்தாயில்லை, தானம் - இல்லறத்தையும், செய்தாயில்லை - செய்கின்றாயில்லை, நடுவே - இவ்விரண்டுமாகாது, நீ யெவன் செய்கின்றாய் - நீ யாது செய்கின்றாய், இந்

தவம் - துறவறம் } தானம் தவம் இரண்டு
தாங்கா வானுலகம்

தியம் - ஐம்பொறிகளும், சொன்னவா - விரும்பிய பிரகாரம், செய்யும் - செய்கின்ற, என்னெஞ்சமே - எனது நெஞ்சமே - (எ - று).

என்னெஞ்ச மேயிட மேயுடைத் தேயிந்தி ராதிவிண்ணோர்
முன்னஞ்செய் பன்னிரண் டோசனைத் தாய்முழு மாமணித்தூண்
மன்னிஞ்சி மூன்றொடுமானுங் கணமுதலேழ் நிலத்துப்
பொன்னின் சினலய மாயிற் றன்றே வெங்கள் புங்கவற்கே. 18

(இ-ள்.) என் - அடியேனுடைய, நெஞ்சம் - மனமானது, எங்கள் - எமது, புங்கவர்க்கு - சுவாமி (வீற்றிருப்பதற்கு), இந்திராதி - தேவேந்திரன் முதலாகிய, விண்ணோர் - தேவர்கள், முன்னம் - முன்னமே, செய் - நிர்மித்த, பன்னிரண்டோசனைத் தாய் - பன்னிரண்டோசனை அளவையுடையதாய், மா - பெருமை பொருந்திய, முழுமணி - முழுமணிகளாற் செய்யப்பட்ட, தூண் - தூண்கள் பொருந்தியிருக்கின்ற, மன் - நிலைபெற்ற, இஞ்சிமூன்றொடு - மூன்று மதில்களோடு, மானுங்கணமுதல் - மானஸ்தம்ப முதலாகிய, ஏழ்நிலத்து - எழுவகையாகிய இடத்தையுடைய, பொன்னின் ஜினலயம்-பொன்னாற் செய்யப்பட்ட சமவ சரணம், ஆயிற்று - ஆயினது, இடமுடைத்து ✻ ஆதலால் அம்மனது மிகவு மிடமுடைத்து :—(எ - று) இஞ்சிமூன்றுவன - உதயதரம், பிரீதி தரம், கல்யாண தரம் என்பனவாம். எழு நிலமாவன, மான ஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்திய விருட்சம், த்வஜபூமி, சித்தார்த விருட்சம், ஸ்தூப ஹர்மாவலி என்பனவாம். அங்கணம் - இடம் நிலம் விருத்தாகார முடையதாய்ப் பிராகாரமாகிய ஸ்தானம்.

புங்கவன் பூரணன் புத்தன் புராதனன் பூண்புனையாச்
சங்கரன் சக்கரன் றுமரை யோனெனத் தாவில்செங்கட்
சிங்கவன் பேரணைத் தீர்த்தனைத் தீவினைத் தெவ்வெனும்பேர்
மங்கவன் ரூேவெள்ளை வாள்கொண்ட வீரனை வாழ்த்துவதே. 19

(இ - ள்). புங்கவன் - உயர்ந்தவர், பூரணன் - (குணங்களாலே) நிறைந்தவர், புத்தன் - அறிவுடையவர், புராதனன் - பழையவர், பூண் - ஆபரணத்தை, புனையா - தரிக்காதவராகிய, சங்கரன் - சுகத்தைச் செய்கின்றவர், சக்கரன் - (தரும) சக்கரத்தை யுடையவர், தாமரையோன், பொற்றாமரையை யுடையவர், என - என்று, தாவில் - கேடில்லாத, செம் - செவ்விய, கண் - கண்களையுடைய, சிங்கம் - சிங்கங்களால் தாங்கப்பட்ட, வண் - வளம் பொருந்திய, பேரணை - பெருமை பொருந்திய ஆசனத்தில் வீற்றிருக்கும், தீர்த்தனை - அருகதேவரை, வெள்ளை - சுக்லத்தியானமாகிய, வாள் - வாளாயுதத்தைக் கொண்ட, வீரனை - வீரத்தையுடையவரை, தீவினை - தீவினையாகிய, தெவ் - சத்துரு, என்னும் - என்கின்ற, பேர் - பெயரும், மங்கவன்றே - கெடுதற்கன்றே, வாழ்த்துவது - துதிப்பது :—(எ - று); தாமரையோன் என்பதை - இயற் பெயராக்கி, புங்கவன், பூரணன், புத்தன், புராதனன், சங்கரன், சக்கரன் என்பனவற்றை விசேடனமாகச்செய்து - அத்தன்மையினையுடையவரை வாழ்த்துவது எனவே, அம்மொழிகளின் பொருளுக்கு மாறாயிருக்கின்ற, இழிந்தோர், குறைந்தோர், அறிவிலார், புதியவர், சுகத்தைச் செய்யாதார், மறவாழியராகிய மற்றோர் தெய்வத்தை வணங்கோமென்னும் குறிப்பெச்சந்

தோன்றிற்று. வினையை வென்றோனாதலால் வீர னென்றார்.

வாழ்த்துதி நின்புகழ் வாழ்த்தவல் லாரைத்தம் வாய்வலத்தாற்
பாழ்த்துதி செய்துனைப் பாடா தவர்களைப் பல்வினைக்கே
சூழ்த்துதி யாமறி யாச்சுழ றுன்பப் பெருங்குழிக்கே
யாழ்த்துதி யார்வமுஞ் செற்றமு நீக்கிய வச்சுதனே. 20

(இ-ள்). நின் - நுமது, புகழ் - புகழினை, வாழ்த்த வல்லாரை - ஸ்தோத்திரஞ் செய்யவல்லாரை, வாழ்த் துதி - வாழச் செய்கின்றீர். வாய் - வாயிலிருந்து வருகின்ற, வலத்தால் - சமர்த்திக்கத்தக்க மொழி களாலே, பாழ் - இதர தெய்வங்களைக் குறித்து பாழாகிய, துதிசெய்து - தோத்திரஞ்செய்து, உனைப் பாடாதவர்களை - தேவரீர் விஷயமாகத் துதியாத பாஷண்டிகளை, பல் - பலவாகிய, வினைக்கே - வினை யினுலேயே, சூழ்த்துதி - சூழச்செய்கின்றீர். அன்றி யும், யாம் - நாங்கள், அறியா - அறியாத, சுழல் - சுழல்கின்ற, துன்பம் - துன்பமாகி, பெருங்குழிக்கு - ஆழமாகிய குழியில், ஆழ்த்துதி - அழுந்தச் செய் கின்றீர், ஆர்வமும் - ஆசையும், செற்றமும் - குரோ தமும், நீக்கிய - ஒழித்த, அச்சுதனே - அழிவில்லாத வனே, (எ-று.) வினைக்கே - குழிக்கே என்பன வேற்றுமை மயக்கம்.

அச்சுமல் லாவல்லு மாமெழுத் தாதியு மந்தமுமா
வச்சதெல் லாமதி நூலும் பொதிந்தது மந்திரமாய்
மெச்சுமெல் லாருக்கும் வேண்டிற் றளிப்பது மெய்த்தவத்தோர்
நச்சுமல் லார்குடை மூன்றுடை நான்முக னற்பெயரே. 21

(இ-ள்). அச்சும் - உயிரெழுத்தும், அல்லா - அந்தவுயிரல்லாத, அல்லும் - மெய்யெழுத்தும், ஆ - ஆகிய, எழுத்து - எழுத்துக்கள், ஆதியும் - முதலாகவும், அந்தமும் - ஈறாகவும், வச்சது - வைக்கப்பட்டதும், எல்லாமதி நூலும் - எல்லாப் பரமாகமங்களுள்ளும், பொதிந்ததும் - தங்கியதும், மெச்சும் - கொண்டாடத்தக்க, மந்திரமாய் - மந்திரமாகிய, எல்லாருக்கும் - யாவர்க்கும், வேண்டிற்று - வேண்டியவைகளை, அளிப்பதும் - கொடுக்கத்தக்கதும், மெய் - உண்மையுணர்ந்த, தவத்தோர் - தவத்தையுடையவர்கள், நச்சும் - விரும்புகின்ற, அல் - இருளை, ஆர் - ஓட்டுகின்ற, குடை மூன்று - சந்திரன் போலும் மூன்று குடைகளையுடைய, நான்முகன் - அதிசயத்தால் நான்குமுகங்களையுடைய சுவாமியினது, நற்பெயர் - அருகரென்னுந் திருநாமமேயாம் - (எ-று). குடை மூன்றுவன - சந்திராதித்யம், நித்ய விநோதம், ஸகல பாஜனம் என்பனவாம்.

பெயர்த்தன்ப ரிம்பர்நண் ணுமைநல் கும்பெரு மைச்சரணும்
புயத்தம்ப ராம்பர போற்றிவிண் ணப்பமப் புன்னெறித்துன்
நயத்தன்பி லாரொடு தீவினைத் தெவ்வென்று நாட்டியநற்
சயத்தம்ப மோநம்ப நின்றிரு வாயிற் றனித்தம்பமே. 22

(இ-ள்). அன்பர் - அடியார்கள், பெயர்த்து - திரும்பி, இம்பர் - இவ்வுலகத்தில், நண்ணுமை - பிறவாதிருக்கும்படி, நல்கும் - அருள் செய்கின்ற, பெருமை - பெருமை பொருந்திய, சரணம்புயத்து - பாததாமரையையும், அம்பரம் - ஆகாசத்தை, அம்பர - வஸ்தரமாகவுமுடைய சுவாமியே, போற்றி - துதித்து, விண்

ணப்பம் - நான் செய்துக் கொள்ளும் விண்ணப்பமாவது, அப்புன்னெறி - அந்தமித்யாமார்க்கத்தில், துன் - சேருகின்ற, நயத்து - தங்கள் தங்கள் மதங்களையே தகுதியுள்ளனவென்று கருதிய, அன்பிலாரொடு - உம்மிடத்தில் பக்தியில்லாத மனிதரோடு, தீவினை - கொடிய வினையாகிய, தெவ் - பகையை, வென்று - ஜயித்து, நாட்டிய - நாட்டின, நல் - நல்ல, ஜயத்தம்பமோ - சயத்தம்பமோ, நம்ப - எம்மிறைவரே நின் - உமது, திரு - தெய்வீகமாகிய, வாயில் - கோபுரவாயிலிலிருக்கும், தனி - ஒப்பற்ற, தம்பம் - மானஸ்தம்பம் (எ - று).

தம்பத்தின் மேற்புழை யேழுள வாக்கித் தமித்துவைத்த
கும்பத்தி னேடு நிகரொக்கு மாங்குணிப் பின்றியைந்தாம்
பம்பத்தி காயம் பணித்தபி ரான்பசுந் தாமரைத்தாள்
செம்பத்தி யால்வணங் காச்சிறி யார்தஞ் சிரத்திரளே. 23

(இ - ள்). தம்பத்தின் - ஒரு தூணில், மேல் - மேலே, புழையேழு - ஏழு துளைகளை, உளவாக்கி - உண்டாக்கி, தமித்து - தனிமையாக, வைத்த - வைக்கப்பட்ட, கும்பத்திேனடு - குடத்தோடு, நிகரொக்கும் - மிகவுமொக்கும், ஆம் - உண்டாகாநின்ற, குணிப்பு - எண்ணம், இன்றி - இல்லாமல், ஐந்தாம் - ஐந்தாகிய கணக்கையுடைய, பம்பத்திகாயம் - பஞ்சாஸ்திகாயத்தை, பணித்தபிரான் - அருளிச்செய்த பிரானது, பசும் - அழகிய, தாமரை - தாமரை மலர் போன்ற, தாள் - பாதங்களை, செம் - செவ்விதாகிய பக்தியால் - அன்பினல் வணங்கா - தொழாத, சிறியார்தம் - அற்ப அறிவினருடைய, சிரத்திரள் - சிர

சின் கூட்டங்கள் - (எ - று). பஞ்சாஸ்தி காயமென்பது பம்பத்தி காயமெனத்திரிந்தது. அதாவது, ஜீவாஸ்தி காயம், அஜீவாஸ்தி காயம், தர்மாஸ்தி காயம், அதர்மாஸ்தி காயம், ஆகாசாஸ்தி காயம் என்பனவாம். பஞ்சாஸ்திகாயமென்பது விசிஷ்டவாசக பதப்பொருளைத் தராமல் விசேஷமாகவே நின்று ஐந்தாம் என்கிற விசேஷணத்தை முதலிற் பெற்று நின்றது.

சிரத்திர ணன்கில னைம்படை யேந்திலன் றிண்சிலையாற்
புரத்திர யங்களையும் பொடி யாக்கிலன் போதியென்றோர்
மரத்திரள் சேர்ந்துபன் மாயஞ்சொல் லானெந்தை மன்னுயிர்க்குப்
பரத்திர யங்கள் பணித்த பிரானெங்கள் பண்ணவனே. 24

(இ - ள்). எந்தை - எமக்குக் காரண பூதராகியும், மன் - நிலைபெற்ற, உயிர்க்கு - உயிர்களுக்கு, பரம - மேலாகிய, திரயங்கள் - ரத்நத்திரயங்களை, பணித்த பிரான் - அருளிச் செய்த தலைவராயுமிருகின்ற; எங்கள் - எம்முடைய, பண்ணவன் - அருகர் திரள் - திரளாகிய, சிர நான்கு - நான்குதலைகளை, இலன் - இல்லாதவர். ஐம்படை - பஞ்சாயுதங்களை, ஏந்திலன் - தரிக்காதவர், திண் - வலிமை பொருந்திய, சிலையால் - வில்லினல், புரத்திரயங்களையும் - மூன்று புரங்களையும், பொடியாக்கிலன் - பஸ்பமாகச் செய்யாதவர், போதியென்ற - அரசுயென்று சொல்லப்பட்ட, ஓர் - ஒப்பற்ற, மரம் - மரத்தினது, திரள் - அடியில், சேர்ந்து - சேர்ந்திருந்து, பன்மாயம் - உயிரில்லை யென்று சொல்லுதல் முதலிய பல மாயங்களை, .சொல்லான் - சொல்லாதவராயிருக்கின்

ரூர் - (எ - று) திரயங்களாவன - ஸம்மியக் தரிசனம், ஸம்மியக்கியானம், சம்மியக் சாரித்திரம் எனவாம். ஐம்படை - சங்கு - சக்கிரம் - வில் - வாள் - தண்டு என வாம், புரத்திரயம் - முப்புரம்; மாயம் - சூனியவாதம். இச்செய்யுள் - பிர்மா, விஷ்ணு, உருத்திரன், புத் தன், முதலியோர், பொய்த்தேவரெனவும், அருகர் மெய்த்தேவரெனவும் விளக்கிற்று.

பண்ணவ னூர்சக மூன்றுமொர் மாத்திரை பார்க்குமெங்கள்
கண்ணவ னூர்தம்மை கேட்டறி யார்கொல் களிகளைப்போல்
விண்ணவன் காற்றவன் வெந்தீ யவன்விரி நீர்பொதிந்த
மண்ணவன் மற்றுமெல் லாமவனே யென்னு மானிடரே. 25

(இ - ள்). களிகளைப்போல் - மதுபானஞ் செய்த வர்களைப் போல், விண் - ஆகாயமும், அவன் - அவனே, காற்று - காற்றும், அவன் - அவனே, வெம் - வெப்பமாகிய, தீ - அக்கினியும், அவன் - அவனே, விரி - விரிந்த, நீர் - நீரும், அவன் - அவனே, பொதிந்த - அந்நீரைத் தாங்கிய, மண் - பூமியும், அவன் - அவனே, மற்றுமெல்லாம் - அவைகளொழிந்த மற்றுமெல்லாம் அவனே - அந் தப் பிரம்மமே, எனும் - என்கின்ற, மானிடர் - மனிதர்கள், சகமூன்றும் - மூன்றுலகத்தையும், ஓர் மாத்திரை - ஒருக்ஷணத்திற்குள்ளே, பார்க் கும் - பார்க்கவல்ல, கண்ணவனூர் - கருத்தை யுடையவராகிய, எங்கள் - எங்களுடைய, பண்ண வனூர் - அருகருடைய, தன்மை - குணத்தை கேட் டறியார் கொல் - கேட்டிறியார் போலும் (எ - று). இதனல் அத்வைதமத கண்டனஞ் சொல்லப்பட்டது விரி நீரோடு அவனென்பதை யொட்டிக்கொள்க.

இடரார் பவக்கங்கு லின்கண்மற் றென்னையுங் காணவொட்டாப்
படரார் வினைத்தொல் லிருள்போ யிரியப்பைம் பொன்னணைமே
லடரார் மலர்பிண்டி யோடும் புகுந்தென் னகத்திருந்த
சுடரார் விளக்கைமெய்ஞ் ஞானங் குலிகொண்டு தூண்டுவனே. 26

(இ - ள்). இடர் - துன்பமானது, ஆர் - பொருந்திய, பவம் - பிறப்பாகிய, கங்குலின்கண் - இரவின் கண், என்னையும் - என்றனையும், காணவொட்டா - பார்க்க வொட்டாத, படர் - வருந்தி நினைக்கத்தக்கதாக, ஆர் - நிறைந்த, வினை - வினையாகிய, தொல் - அநாதி, இருள் - இருளானது, போயிரிய - ஸ்வரூப நாசமாக, பைம்பொன் - பசிய பொன்னாற் செய்யப்பட்ட, அணைமேல் - ஆசனத்தின்மேல், அடராம் - இதழ்கள் நெருங்கிய, மலர் - புஷ்பங்களையுடைய, பிண்டியோடும் - அசோகவிருக்ஷத்தோடும், புகுந்து - உட்பிரவேசித்து, என்னகத்து - என் மனதில், இருந்த - வீற்றிருக்கின்ற, சுடரார் - மூன்று ஜோதியையுடைய, அருகரது, விளக்கை - பரமாகமமென்னும் விளக்கை, மெய் - சத்தியமாகிய, ஞானம் - ஞானமென்னும், அங்குலிகொண்டு - விரலைக்கொண்டு, தூண்டுவன் - தூண்டுவேன் - (எ - று). மற்று அசை, முச்சுடராவன, ஆலோகம், பிரபா மூர்த்தி, கனப்பிரபை.

தூண்டுதின் டேருருள் போலச் சுழன்றுதொல் யோநிகட்கே
மீண்டுகொண் டேகுமவ் வெவ்வினைக் கஞ்சிநின் மெய்ச்சரணம்
பூண்டு கொண்டேனினிப் போகவொட் டேன்பொரு ளாகவென்னை
யாண்டுகொண் டாயற வாழிகொண் டேவென்ற வந்தணனே. 27

(இ - ள்). என்னை - அடியேனை, பொருளாக - ஒரு பதார்த்தமாக, ஆண்டு கொண்டாய் - ஆண்டு

கொண்டவரே, அறவாழி - தர்ம சக்கரத்தை, கொண்டே - கருவியாகக் கொண்டே, வென்ற - வினைகளைவென்ற, அந்தணனே - அழகிய குளிர்ச்சி யாகிய கிருபையையுடைய சுவாமியே, தூண்டு - நடத் தாநின்ற, திண் - வலி பொருந்திய, தேர் - தேரி னுடைய, உருள் போல - சக்கரம் போல், சுழன்று - நாற்கதியிலு மாறி மாறிச் , சுழன்று, தொல் - முன்னே பிறந்த, யோநிகட்கே - யோநி களுக்கே, மீண்டு - மீளவும், கொண்டு - ஆத்து மாவைக்கொண்டு, ஏகும் - நடக்கின்ற, இவ்வெவ் வினைக்கு - இந்தக் கொடிய வினைக்கு, அஞ்சி - நடுங்கி, நின் - நுமது, மெய் - மெய்மை பொருந்திய, சரணம் - பாதத்தை, பூக்கொண்டேன் - மனதில் தரித்துக் கொண்டேன், இனி - இனிமேல், போகவொட் டேன் - வீணுகப் போகவிடமாட்டேன் - (எ - று).

அந்தர மேலொரு மந்தரம் வந்தென வம்மலர்மேல்
வந்தபி ரானடிக் கன்பிலா ராயின் மறையவரே
னிந்தர்கள் சாதியி னீசர்கண் டீரந்த நீசருமச்
சுந்தர னேசர்க ளாயின்விண் ணேரினுஞ் சுத்தர்களே. 28

(இ - ள்). அந்தரம் - ஆகாயத்தில், ஒரு மந்த ரம் - ஒரு மந்தரகிரியானது, வந்தென - வந்தது போல, அம் - அழகிய, மலர்மேல் - புஷ்பத்தின் மேல், வந்த - நடந்தருளிவந்த, பிரான் - சுவாமியி னுடைய, அடிக்கு - பாதத்திற்கு, அன்பு - பக்தி, இலராயின் - இல்லாதவர்களாயிருப்பாராயின், மறை யவரேல் - அவர்கள் பிராமணர்களாயிருந்தாலும், நிந்தர்கள் - நிந்திக்கதக்கவர்களே யாவர், சாதியில் - ஜாதியிலும், நீசர்கண்டீர் - நீசரேயாவர்கள், அந்த -

அப்படிப்பட்ட, நீசரும் - புலையரும், அச்சுந்தரன் - அவ்வழகிய சுவாமிக்கு, நேசர்களாயின் - அடியார்களானல், விண்ணேரினும் - தேவரினும், சுத்தர்கள்- பரிசுத்தர்களாவார்கள் - (எ - று) அழகிய மலரென்பதனல் - வெண்மையாகிய மலரெனப் பொருள் கொள்க; மலருக்கு அந்தரத்தை உபமானமாக்கின படியால் நிர்மலமான வெள்ளிய ஆகாயமெனப் பொருள் பெற்ரும்.

சுத்தியைத் தானுடைச் சொல்லரும் பல்குணத் தொல்சுகத்த
சித்தியைத் தாவென்று செப்புகி லேன்முதற் சீவனுள்ளிட்
டத்தியைத் தானுள்ள வாறறைந் தாயடி விட்டகலாப்
பத்தியைத் தாவது முத்திபெற் ருரிற்பதின் மடங்கே. 29

(இ - ள்), சுத்தியைத் தான் - பரிசுத்தத்தையே உடை - உடைய, சொல்லரும் - சொல்லுதற்கரிய, பல் குணம் - பல குணங்களையும், தொல் - பழமையாகிய, சுகத்த - சுகத்தினையுமுடைய, சித்தியை, மோக்ஷத்தை, தாவென்று - கொடுவென்று, செப்புகிலேன் - சொல்லமாட்டேன், சீவன் முதல் - ஜீவன் முதலாக, உள்ளிட்ட - உள்ளிட்டு சொல்லப்பட்ட, அத்தியை - பஞ்சாஸ்த்தி காயத்தை, தானுள்ளவாறு - அது உள்ள பிரகாரம், அறைந்தாய் - அருளிச்செய்தீர், அடி-உமது திருவடிகளை, விட்டு - விட்டு, அகலா - நீங்காத, பத்தியை - பத்தியை மாத்திரம், தா - கொடுத்தருள்செய்யும். அது அப்படி கொடுத்தல், முத்தி பெற்ருரின் - முத்திபெற்றவர்களின் இன்பத்தைப் பார்க்கிலும் பதின் மடங்கு - பத்துபங்கு உயர்வையுடைய தாம் - (எ - று).

மடங்கலி னுசனம் வார்தளிர்ப் பிண்டிமும் மாமதில்சூழ்
கிடங்கலர்ச் சோலைக ளுடக சாலைகள் கேடில்விண்ணோர்
அடங்கலு மார்கின்ற வாடகக் கோயிலி னும்மடியேன்
முடங்கன் மனுலய மேயினி தாயிற்றெம் முத்தனுக்கே. 30

(இ - ள்.) மடங்கலின் - சிங்கத்தால் தாங்கப் பட்ட, ஆசனம் - ஆசனமும், வார் - நீண்ட, தளிர் - தளிர்களையுடைய, பிண்டி - அசோக விருக்ஷமும், மா - பெருமை பொருந்திய, மும்மதில் - மூன்று மதில் களையும், சூழ் - சூழ்ந்த, கிடங்கு - அகழியும், அலர் - புஷ்பங்களுடைய, சோலைகள் - சோலைகளும், நாடக சாலைகள் - நடனஞ் செய்தற்குத் தகுந்த இடங்களும், கேடில் - அழிவில்லாத, விண்ணோர் - தேவர்களு மாகிய, அடங்கலும் - முழுமையும், ஆர்கின்ற - சேர்ந் திருக்கின்ற, ஆடகம் - பொன்னுலாகிய கோயிலி னும் - ஸமவஸரணத்தைப் பார்க்கிலும், அடியேன் - அடிமையாகிய என்னுடைய, முடங்கல் - சிறிதாகிய, மனம் - மனமென்று சொல்லப்பட்ட, ஆலயம் - கோயிலே, எம் - எம்முடைய, முத்தனுக்கு - கடவு ளுக்கு, இனிதாயிற்று - இன்பமுள்ளதாயிற்று - (எ - று.)

முத்தனென் கோமுதன் மூர்த்தியென் கோசக மூன்றினுக்கும்
அத்தனென் கோவினை யாளியென் கோவடி யேனுடைய
சித்தனென் கோபத்தர் செல்வமென் கோவினைத் தெவ்வொன்றில்லா
நித்தனென் கோபிண்டி நீழலின் கோவை நிரந்தரமே. 31

(இ - ள்.) நிரந்தரம் - எப்பொழுதும், பிண்டி - அசோக விருக்ஷத்தினது, நீழலின் - நிழலின் கீழ் வீற்றிருக்கின்ற, கோவை - அருகக் கடவுளை, முத்த

னென்கோ - சித்தியையுடையவரென்று சொல்லுகவோ, முதல் - ஆதியாகிய, மூர்த்தியென்கோ - உருவுடையரென்று சொல்லுகவோ, சகமூன்றினுக்கும் - மூவுலகத்திற்கும், அத்தனென்கோ - காரணமாயிருக்கிறவரென்று சொல்லுகவோ, எனை - என்றனை, ஆளியென்கோ - ஆண்டவரென்று சொல்லுகவோ, அடியேனுடைய - அடியேனது, சித்தனென்கோ - மனதில் வாசஞ் செய்பவரென்று சொல்லுகவோ, பத்தர் - அடியார்களுடைய, செல்வமென் கோ - பாக்கிய மென்று சொல்லுகவோ, தெவ் - பகையாகிய, வினையொன்று - ஒரு தீவினையும், இல்லா - இல்லாத நித்தனென்கோ - என்றும் அழிவில்லாதவ ரென்று சொல்லுகவோ - (எ - று).

நிரந்தர நான்மை நிறைந்திருந் தானுநின் ருர்களைப்போற்
றரந்தர மல்லனென்ருே வருள் செய்வது தன்றலைமேற்
கரந்தர நின்றெரு கால்வணங் கப்பெறிற் காமர்செல்வப்
புரந்தா லோகம் புழைக்கடை யாகுமெம் போலிகட்கே. 32

(இ - ள்.) நிரந்தரம் - எப்பொழுதும், நான்மை - அனந்த ஞான முதலிய நாற்குணங்களால், நிறைந்திருந்தானும் - நிறைந்திருக்கின்ற வெம்ருடைய சுவாமியும், நின்ருர்களைப்போல் - இவரொழிந்து நின்ற தேவர்களைப்போல், தரம் - இவன் மோக்ஷத்துக்கு உரியவனு யிருக்கின்ருன், தரமல்லன் உரியவனுகான், என்ருே - ஆராய்ந்து பார்த்தோ, அருள் செய்வது - கிருபை செய்தலை யுடையவராவார், தம் - தங்களுடைய, தலைமேல் - சிரசின்மேல், கரந்தர - கையை வைத்து கூப்பி, நின்று - நின்றுக்கொண்டு,

ஒருகால் - ஒருதரம், வணங்கப்பேறின் - துதிக்கப் பெறுவாராயின், எம்போலிகட்கு - என்போன்ற மானிடர்களுக்கு, காமர் - சிறந்த, செல்வம் - செல் வத்தினையுடைய, புரந்தரலோகம் - தெய்வலோக மானது, புழைக்கடையாகும் - புழக்கடை போலச் சமீபமாயிருக்கும் - (எ - று). புழைக்கடை யென் பது - புறக்கடையின் விகாரம்.

போலிப் பொருளுடைப் புன்னெறி யாமப் புலிகிடக்குங்
காலிச் சிறுநெறி போய்க்கழி வீர்கழி யாவளத்த
மேலிற் பெருநெறி வீடே புகிற்பிண்டி வேந்தனெங்கோ
னூலிற் பகர்செந் நெறி போய்ப்புகுமி னொடிவரையே. 33

(இ - ள்). போலி - போலியாகிய, பொருளுடை - பொருளினையுடைய, புல் - அற்பமாகிய, நெறியாம் - ஒழுக்கத்தையுடையதாகிய, அப்புலி - அப்படிப்பட்ட அப்பிரசித்தமாயிருக்கின்ற இதர தெய்வங்களாகிய புலிகள், கிடக்கும் - தங்கியிருக்கின்ற, காலி - மாட்டு மந்தைகள் போகும்படியான, சிறுநெறி - சிறுவழி யிலே, போய் - சென்று, கழிவீர் - சாகின்ற மனிதரே, கழியா - கெடாத, வளத்த - வளங்களையுடைய, மேலின் - மேன்மை பொருந்திய, பெருநெறி - பெரிய வழியினையுடைய, வீடு - மோக்ஷத்தை, புகின் - செல்ல விரும்பினால், பிண்டி - அசோகவிருக்ஷத்தி னிழலின் கீழ் வீற்றிருக்கின்ற, வேந்தன் - அருகராகிய என் கோன் - எனது ஸ்வாமியருளிச் செய்த, நூலில் - பரமாகமங்களில், பகர் - சொல்லப்பட்டிருக்கின்ற; செம் - நேராகிய, நெறி - மார்க்கத்தில், போய் - சென்று, நொடிவரை - நொடிப்பொழுதில், புகுமின் -

அடையுங்கள் - (எ - று). போலிப் பொருள் - சிறந்த பொருள்போல மாத்திரந்தோன்றி ஆய்ந்து பார்க்கும்போது அச்சிறப்பு இல்லாததாகத் தோன்றுவது. அருகரொழிந்த மற்ற தெய்வங்கள் சொன்ன நூல்களில் பயனுள்ள பொருளில்லாமையால் (போலிப் பொருளுடைப் புன்னெறி யென்றும் அத்தெய்வங்கள் ஜீவஹிம்சை செய்கின்றவைகளாதலில் அவைகளைப் பிரதிபாதிக்கின்ற நூல்களை (புலிகிடக்கும்) நெறி யென்னும், மாட்டுமந்தை - புலி கிடக்கும் கொடிவழியிற் சென்றால் தப்பாது உயிரிழத்தல்போல் மற்றைத் தெய்வங்களை அவர்கள் மார்க்கத்தின் வழிசென்று தொழுகிறவர்கள் பயனடையாமல் துன்பத்தை யடைவார்களாதலால் (காலிச் சிறுநெறி போய்க் கழிவீ ரென்றும் கூறினர். புலி கிடக்கும் காலிற் சிறுநெறியாவது - புலி கிடத்தற்கும் அது கிடப்பதறியாமல் மாடுகள் போவதற்கும் இடமாய்க் காடடர்ந்த சிறிய மார்க்கம்.

வரையம் புகாயெரி மாரிக ளாயவ் வயிரிசெய்த
திரையம் புகாக்கடல் பூக்கட லாகத் தியானமென்னும்
நரையம் புகாவினைத் தெவ்வென்ற வாநன்று நாயடியேன்
நிரையம் புகாநன் னெறிபணித் தாட்கொண்ட நின்மலனே. 34

(இ - ள்). அவ்வயிரி - அப்படிப்பட்ட சத்துருவாகிய கமடனென்னு மேகமானது, மாரிகளாய் - வருஷங்களாக, செய்த - பொழிந்த, வரை - மலையும், அம்பு - நீரும், காய் - காயாநின்ற, எரி - நெருப்பும், அம் - நீருருவமாகிய, திரை - அலைகள், புகா - இல்லாத, கடல் - சமுத்திரத்தை, பூக்கடலாக - புஷ்ப

சமுத்திரமாக, தியான மென்னும் - தியானமாகிய, நரையம் - விருஷபத்தில், புகா - ஏறி, வினை - வினையாகிய, தெவ் - சத்துருவை, வென்றவா - வென்ற விதம், நன்று - நன்றாயிருக்கின்றது, நாய் - நாய் போன்ற, அடியேன் - அடிமையாகிய யான், நிரையம் - நரகத்தில், புகா - அடையாமல், நன்னெறி - நல்ல மார்க்கத்தை, பணித்து - கட்டளையிட்டு, ஆட்கொண்ட - காப்பாற்றின, நின்மலனே - பாபரகிதராகிய சுவாமியே - (எ.- று). நிரை - விருஷபம்; அம் - சாரியை.

நின்மா மலர்ப்பதந் தாங்கு நிரையிதழ்த் தாமரையை
வன்மா வெனக்கொண்ட மற்றதற் காகக்கொல் வான்கருப்பு
வின்மா ரனைச்செற்ற வீரமென் போதென் வீற்றிருப்பப்
பொன்மார் பளித்ததப் புண்டரி காலயம் பொன்னினுக்கே. 35

(இ - ள்.) வான் - சிறந்த, கருப்புவில் - கருப்பு வில்லையுடைய, மாரனை - மன்மதனை, செற்ற - ஜயித்த, வீர - அனந்த வீரியத்தையுடையவரே, அப் புண்டரிகாலயம் - அப்படிப்பட்ட தாமரைப்பூவை வாசமாகவுடைய, பொன்னிக்கு - இலக்குமிக்கு, மென்போதென - மிருதுவாகிய புஷ்பம் போல, வீற்றிருப்ப - வாசஞ்செய்ய, பொன் - அழகு பொருந்திய மார்பு - மார்பை, அளித்தது - கொடுத்தது, நின் - நுமது, மா - பெருமை பொருந்திய, மலர் - புஷ்பம் போன்ற, பதம் - பாதத்தைத், தாங்கும் - தாங்குகிறதற்கு, நிரை - நிரைந்திருக்கின்ற, இதழ் - இதழ்களையுடைய, தாமரையை - தாமரைமலரை, வன்மா வென - வலிமைபொருந்திய குதிரைபோல, கொண்ட

ஏறிக்கொண்ட, மற்றதற்காகக்கொல் - அந்த விஷயத்திற்குத்தானே (எ - று.)

பொன்குண மாமணிப் பூந்துகி லாதிப் பொருளடியேன்
முன்கொணர் வீரென்று மோகிக்கி லேனிந்த மூவுலகு
நன்குணர் கேவல நாயக ரேமுன்பு நானுடைய
வென்குணம் யான்பெற வெம்பெரு மானை யிரக்கின்றதே. 36

(இ - ள்.) பொன் - சுவர்ணமும், குணம் - தோஷமில்லாத, மா - விலையேறப்பெற்ற, மணி - இரத்தினங்களும், பூ - அழகிய, துகிலாதி - ஆடையும் இவை முதலாகிய, பொருள் - பொருள்களை, அடியேன்முன் - அடியேனுக்குமுன்னே, கொணர் வீரென்று - கொண்டுவந்து கொடுப்பீரென்று, மோகிக்கிலேன் - ஆசைப்பட்டிலேன், இந்த மூவுலகும் - இம்மூன்றுலகத்தையும், நன்கு - நன்றாக, உணர் - ஒரே காலத்திலுணர்கின்ற, கேவலம் - கேவலக்கியானத்தையுடைய, நாயகரே - கர்த்தாவே முன்பு - முன்னம், நானுடைய - எனக்கு உரியவைகளாயிருக்கின்ற, என்குணம் - என் குணங்களை, யான்பெற - நான்பெறும்படி, எம்பெருமானை - எனக்குப்பிரானாகிய உம்மை, இரக்கின்றது - யாசிப்பதாம். (எ - று).

இரக்குந் தொழிலொழிந் தியாமே யினியிந்த வேமுலகும்
புரக்கும் பொருளுடை யோம்புல வீர்வம்மின் பூமியெல்லா
நிரக்கும் பொருட்குவை யாவையு நீர்நினை யாதவெல்லாஞ்
சுரக்குஞ் சுரபிகண் டீர்பிண்டி நாதன்றன் றொல்லறமே. 37

(இ - ள்.) புலவீர் - வித்வான்களே, இரக்கும் தொழில் - யாசிக்குந் தொழிலை, ஒழிந்து - நீக்கி, வம்மின் - ஜினதர்மத்தை யனுஷ்டிக்க வாருங்கள்

யாமே - அப்படி செய்தால் நாமே, இனி - இனிமேல், இந்த ஏழுலகும் - இவ்வேழுலகத்தையும், புரக்கும் - ஆளுகிறதற்கு ஏதுவாகிய, பொருள் - விரதத்தை, உடையோம் - உடையோமாவோம், பூமியெல்லாம் - பூமியினிடமெல்லாம், நிரக்கும் - நிரைக்கப்பட்டிருக்கின்ற, பொருட்குவை யாவையும் - எல்லாத் திரவியக் குவியல்களையும், நீர் - நீங்கள், நினையாத - (கிடைக்காதென்பதனால்) நினைத்திராத, எல்லாம் - சுவர்க்க பதவியு மோக்ஷமும், சுரக்கும் - கொடுக்கின்ற, சுரபி கண்டீர் - காமதேனுவாகும், பிண்டிநாதன்றன் - அசோக விருக்ஷத்தின்கீழ் எழுந்தருளியிருக்கின்ற சுவாமியின், தொல்-பழைமையாகிய, அறம்-தர்மம் - (எ - று) கண்டீர் என்பது - தேற்றப்பொருளில் வந்த முன்னிலை யிடைச்சொல்.

தொல்லற மேபடை யாவுடை யச்சுத நாயகன்றன்
நல்லற மேவியிந் நாற்கதி நீக்கிலர் தீக்கதிசேர்ந்
தல்லற மேவுவ ரென்றறைந் தாலு மறிவிலிகள்
புல்லற மேவுவர் போகத்தின் மேலுள்ள மோகத்தினே. 38

(இ - ள்). தொல் பழைமையாகிய, அறமே - தர்மத்தையே, படையா - ஆயுதமாக, உடைய - உடையவரும், அ - அப்படிப்பட்ட, சுதம் - பரமாகமங்களுக்கு, நாயகன்றன் - நாயகருமாயிருக்கின்ற அருகேசுராது, நல்லறமேவி - திருவறத்தைச் சேர்ந்து, இந்நாற்கதி - மனுஷ்யகதி, தேவகதி, நரககதி, விலங்குகதி என்கிற இந்நான்கினால் வந்த பாவத்தை நீக்கிலர் - போக்க ஒழித்திலர், தீக்கதி - தீமையாகிய மார்க்கத்தை, சேர்ந்து - அடைந்து, அல்லறம் - தர்ம

மல்லாத செய்கையை, மேவுவர் - சொல்லத் தொடங்குவர், என்றறைந்தாலும் - என்று சொன்னாலும், அறிவிலிகள் - மூடர்கள், போகத்தின் மேலுள்ள - விஷய போகத்தின் மேலுண்டாயிருக்கிற, மோகத்தின் - ஆசையால், புல்லறம் - அவ்வற்பமாகிய தர்மத்தை, மேவுவர் - செய்ய விரும்புவார்கள் - (எ - று).

மோகங்க ளாற்சில மூர்த்திகள் கண்டது முற்றுணர்ந்தெஞ்
சோகங்க டீர்க்கு மசோகர் சொல்லாதது துன்மதிகள்
யாகங்கள் செய்து மிருந்தசை தின்றுமீர்ங் கள்ளொடொக்கும்
போகங்க ளார்ந்துதம் மெய்யொடும் போய்ப்புகும் பொய்முத்தியே. 39

(இ - ள்). துன்மதிகள் - துற்புத்தியுடைய சில மனிதர்கள், யாகங்கள் செய்தும் - கொலைக்கு ஏதுவாயிருக்கின்ற ஜோதிஷ்டோம முதலிய யாகங்களைச் செய்தும், இருந்தசை - அவ்வேள்வியிற் பெற்றுக் கொண்ட பெருமையாக எண்ணிய மாமிசத்தை, தின்றும் - உண்டும், ஈர்ங்கள்ளொடு - குளிர்ச்சி பொருந்திய கள்ளிற்கு, ஒக்கும் - ஒத்திருக்கும், போகங்கள் - ஸ்திரி விஷய முதலிய போகங்களை, ஆர்ந்தும் - அனுபவித்தும், மெய்யோடும் - உண்மையான முத்தியை அடைகிறதற்கு உபயோகியாயிருந்த தேகத்தோடும், போய்ப்புகும் - போய் அடைகின்ற, பொய் - பொய்யாகிய, முத்தி - முத்தியானது சில மூர்த்திகள் - அற்பவறிவினையுடைய சில தேவர்கள், மோகங்களால் - அஞ்ஞானத்தால், கண்டதும் செய்ததும், முற்றுணர்ந்து - முழுதுமுணர்ந்து, எம் - எம்முடைய, சோகங்கள் - துக்கங்களை, தீர்க்கும் -

நீக்கியருள் செய்கின்ற, அசோகர் - அசோக மரத்தின்கீழ் எழுந்தருளி இருக்கும் அருகர், சொல்லாத - அருளிச் செய்யாதது மாயிருக்கின்றது - (எ - று.) அருகற்கு - முற்றுணர்தல் சொல்லப்பட்டதனுல் இதர தேவர்களுக்குச் சிற்றறிவுதானே பெறப்பட்டது. ஒரு யாகத்தில் மாதரைப் புணர்வது அவசியமான கர்மமானபடியால் - அதுவுங் கூடாதென்பார், ஈர்ங்கள்ளொடொக்கும், போகங்களார்ந்தும், என்ருர்கள். குடி, குடித்தவனை மயக்கி அறிவிழக்கச் செய்வதுபோல் - காமமும் அனுபவித்தவனைச் செய்தலால் - கள்ளிர்க்கும், போகத்திற்கும் ஒப்புமை கூரப்பட்டது.

முத்திற் பொலிகுடை மூன்றுடை யார்க்கிரண் டின்றியொன்றும்
பத்திப் பெரும்பத மல்லதுண் டோபசி நோய்முதலாம்
புத்திக் கிலேசங்க ணீங்கிப்புக் கார்க்கென்றும் போதலில்லாச்
சித்திப் பெயர்ப்பத் தனம்புகு வார்கட்குச் செவ்வழியே. 40

(இ - ள்). பசிநோய் முதலாம் - பசி, வியாதி முதலாகிய, புத்திக்கிலேசங்கள் - புத்தியைக் கிலேசப்படுத்துகின்றவைகளை, நீக்கி - ஒழித்து, புக்கார்க்கு - அடைந்தவர்க்கு, என்றும் - எக்காலத்திலும், போதலில்லா - திரும்புதலில்லாத, சித்திப்பெயர் - முத்தியென்று பேர்பெற்ற, பத்தனம் - பட்டணத்தை, புகுவார்கட்கு - அடைகிறவர்களுக்கு, முத்தின் - முத்துக்களால், பொலி - பிரகாசிக்கின்ற, குடை மூன்றுடையார்க்கு - மூன்று குடைகளையுடைய அருகேசுரருக்கு, இரண்டின்றி யொன்ரும் - வேறு தெய்வமில்லை யென்கிற ஒப்பற்றதாகிய, பத்தி -

பக்தியாகிய, பெரும்பதமல்லது - பெரிய வழி யல்லது, உண்டோ - வேறுண்டோ - (எ - று).

வழுவதல் லாவதம் வல்லன தாங்கி வரதமற்றுன்
குழுவதெல் லாநின் றிருவுரு வாக்கொண்டு குற்றமுற்று
லழுவதல் லாலறி யாமகப் போலடி யேனுநின்னைத்
தொழுவதல் லாது முழுதுணர்ந் தாய்க்கென்கொல் சொல்லுவதே. 41

(இ - ள்). வரத சிரேஷ்டரே, வழுவதல்லா - குற்றமில்லாத, வல்லன - சரீரம் பொறுக்க வல்லனவாகிய, வதம் - விரதங்களை, தாங்கி - பொருந்து, உன் - உமது, குழுவதெல்லாம் - தபோதனராகிய கூட்டமெல்லாம், நின்றிரு வுருவாக்கொண்டு - தேவரீரது திருமேனி வடிவாகப் பாவித்து, குற்றம் - யாதேனுமொரு குற்றம், உற்றால் - நேரிட்டால்- அழுவதல்லால் - அழுவதே யறிவதல்லது, அறியா, தனக்கு வந்த விதம் இன்னதென்று சொல்லத் தெரியாத, மகப்போல் - குழந்தைபோல், அடியேனும் - தொழும்பனாகிய யானும், நின்னைத் தொழுவதல்லாது - உம்மை வணங்குவதே யல்லாமல் முழுதுணர்ந்தாய்க்கு - முற்றுமுணர்ந்த உமக்கு, சொல்வது - அறிந்து சொல்வது, என்கொல் - யாதிருக்கின்றது - (எ - று). நீரென்று கருத்தறிவீரென்பது தோன்ற - முழுதுணர்ந்தாய்க்கு என்றார்.

சொல்லார் பிறர்க்கிதஞ் சூழார் தமக்கரண் சூழ்பொருண்மேற்
கில்லார் நசைவிடக் கேளார் திருவறங் கேள்வியினுங்
கொல்லா வதத்தெங்கள் கொற்றவன் கூறிய நற்றவத்தே
நில்லார் நிரையத்து நிற்பா ரிருக்கின்ற நீசர்களே. 42

(இ - ள்). கேள்வியினும் - கேள்வியினாலும், கொல்லாவதத்து - கொல்லா விரதத்தையுடைய, எங்கள் - எங்களுடைய, கொற்றவன் - அருகேசுரர், கூறிய - அருளிச்செய்த, நல் - நல்ல, தவத்தே - தவஞ் செய்தலில், நில்லார் - ஸ்திரப்பட்டு நிற்காமல், நிரையத்து - நரகத்தில், நிற்பான் - நின்று வருந்தும் படி, இருக்கின்ற - இருக்கிற, நீசர்கள் - கொலைத் தொழிலால் நீசத்தன்மை அடைந்த மானிடர்கள், பிறர்க்கு - அயலார்க்கு, இதம் - இதமான மொழி களை, சொல்லார் - சொல்லார்கள், தமக்கு - தங்க ளுக்கு, அரண் - காவலான பொருளை, சூழார் - நினைக் கார், சூழ் - தம்மை அடைந்திருக்கிற பொருண் மேல் - பொன் பணம் முதலான பொருண் மேலிருக் கிற, கில்லார் - பற்றுவிட மாட்டார்கள், நசைவிட - ஆசையொழிய, திருவறம் - ஜினதர்மத்தை, கேளார் - கேட்க மாட்டார்கள் (எ - று).

நீசர னுமிடங் கண்டுகொண் டாய்நெஞ்ச நின்றிலங்குந்
தேசர ணுமொளி மூன்றுடை யானிரு செஞ்சுடரோ
பேய்சர ணரவிந் தங்களல் லார்சுமந் தீன்றெடுத்த
தாய்சர ணேதந்தை தான்சர ணேநைந்து சாமவர்க்கே. 43

(இ - ள்). நெஞ்சம் - மனமே, நின்றிலங்கும் - உலகத்தில் நிலைபெற்று விளங்குகின்ற, தேசு - காந்திகளுக்கெல்லாம், அரணும் - ஆதாரமாயிருக் கின்ற, ஒளி மூன்றுடையான் - பிரபாவலய மூன் றினையுடைய அருகரது, இரு - இரண்டு, செஞ் சுடரை - சூரியனை, ஏய் - ஒத்த, சரணாரவிந்தங்கள் - பாத தாமரைகள், அல்லால் - அல்லாமல், நைந்து -

கர்ப பந்தத்தால் வருத்தமுற்று, சாமவர்க்கு - இறக்கின்ற மானிடர்க்கு, சுமந்து - பத்து மாதம் வரைக்கும் சுமந்து, ஈன்றெடுத்த - பெற்றெடுத்த, தாய் - தாயானவள், சரணோ - ரக்ஷகஸ்தானமாவாளோ, தந்தைதான் - தகப்பன்தான், சரணோ - அடைக்கலஸ்தானமாவானோ, ஆதலால், நீ - நீயானவன், சரணமிடம் - அந்தப் பாதங்களையே புகலிடமாக, கண்டு கொண்டாய் - அறிந்து கொண்டாய் - (எ - று).

சாமரை சங்குசிங் காசன மாசனஞ் சாதுரங்கஞ்
சோமரை வெல்சுடர் வெண்குடை நன்கொடித் துங்கமன்னர்
காமர சானவ ரத்திக ளாதல்கண் டாலுந்தொண்டர்
பூமரை மேல்வருங் கற்பக நீழற் புகுகிலரே. 44

(இ - ள்). சாமரை - சாமரம், சங்கு - வெற்றி குறித்தற்கு, ஊதும் சங்கவாத்தியம், சிங்காசனம் - சிங்கத்தால் தாங்குவதாகச் செய்யப்பட்ட ஆசனம், மாசனம் - மந்திரி பிரதானி முதலிய பரிஜனங்கள், சாதுரங்கம் - யானை, குதிரை, தேர், காலாட்களாகிய நால்வகைச் சேனை, சோமரை - சந்திரனை, வெல் - பிரகாசத்தால் வென்ற, சுடர் - கிரணங்களையுடைய, வெண்குடை - வெண்மை பொருந்திய குடைகள், நன்கொடி - அழகு பொருந்திய கொடிகள் ஆகிய இவற்றையுடைய, துங்கம் - உயர்வாகிய, மன்னர் - வேந்தர்கள், காம - இச்சிக்கத்தக்க பெருஞ்செல்வத்தையுடைய, அரசமன்னவர் - சிறந்த சக்ரவர்த்திகளா யிருந்தவர்களும், அத்திகளாதல் - ஏழைகளாயிருந்து திரிவதை, கண்டாலும் - பார்த்திருந்தாலும், தொண்டர் - அடியாராகி, பூமரைமேல் - தாமரை

பூவின்மேல், வரும் - எழுந்தருளி வருகின்ற, கற்பகம் - அருகராகிய கற்பக விருக்ஷத்தினது, நீழல் - நிழலில், புகுகிலர் - அடையார்கள் - (எ - று.)

புகாநின்ற ஞாயிறு போகின்ற செல்வமும் போம்புனலுட்
டொகாநின்ற தூய்மண லொக்கின்ற சுற்றமுஞ் சோர்ந்திளமை
யுகாநின்ற மேனியு மேலுத வாவென் றுனையடைந்தே
நகாநின்ற தாமரை மேனடந் தேகிய நற்றவனே. 45

(இ - ள்.) புகாநின்ற - உதித்து அஸ்தமிக்கின்ற, ஞாயிறும் - சூரியன்போல், போகின்ற - தோன்றிநிலையில்லாமற் கெடுகின்ற, செல்வமும் - ஐசுவரியமும், போம்புனலுள் - ஓடுகின்ற ஆற்று நீரால், தொகாநின்ற - ஓரிடத்திினின்று மற்றோரிடத்திற் குவிக்கப்பட்ட, தூய்மணல் - புதுமணலை, ஒக்கின்ற - ஒத்த, சுற்றமும் - பந்துக்களும், சோர்ந்து - நாளுக்குநாள் வேறுபட்டு, உகாநின்ற - கெடுகின்ற, இளமை - பாலியத்தையும், மேனியும் - மேனியையுமுடைய உடலும், மேல் - மறுமைக்கு, உதவாவென்று - எனக்குதவி செய்யமாட்டா தனவாமென்று, உனை - நும்மை, அடைந்தேன் - சரணகஅடைந்தேன், நகாநின்ற - பிரகாசிக்கின்ற தாமரைமெல் - தாமரைமலரின்மேலே, நடந்தேகிய - நடந்து செல்கின்ற, நற்றவனே - நல்ல தவத்தினையுடைய அருகேசுரரே :—(எ - று)

ஆற்றுவெள்ளத்தால் ஓரிடத்தில் மேடிடப்பட்ட மணற்கூட்டம் அற்றை நாளிலேயே அவ்விடத்தை வேறிடத்திலிருந்த மணற்குவை வந்து மேடாக்குதலு

மாகிய நிலையாததுபோல், ஒரு பிறப்பின் கண்ணே ஒருவனுக்கு உறவினராயிருந்தோர் இறந்து, பிறந்து மற்றொருவர்க்கு உறவினராதலும், மற்றொருவனுக்கு உறவினராயிருந்தோர் இறந்து முன் சொல்லப்பட்டவனுக்கு உறவாதலும், இயல்பாகையால் மணலொக்கின்ற சுற்றமுமென்றார்.

நற்றவர்க் குச்சித்தி நல்கவல் லார்க்கிரு நால்வினையுஞ்
செற்றவர்க் குச்செய்ய தாமரை யேறிச்செவ் வேநடக்கக்
கற்றவர்க் குக்குரு டொத்துழல் வேற்குநற் காட்சிதந்த
மற்றவர்க் குச்செய்வ தாளல்ல தேதுங்கை மாறிலையே. 46

(இ - ள்.) நல் - நல்ல, தவர்க்கு - தவத்தையுடையவர்களுக்கு, சித்தி - மோக்ஷத்தை, நல்க வல்லாற்கு - கொடுத்தருள் செய்கின்றவர்க்கு, இரு நால்வினையும் - எண்வகைவினைகளையும், செற்றவற்கு - ஜயித்த சித்தபரமர்க்கு, செய்ய - சிவந்த, தாமரையேறி - தாமரை மலரிலேறி, செவ்வே - நேராக, நடக்கக் கற்றவற்கு - நடக்கின்ற அருக பரமர்க்கு, குருடொத்து - பிறவிக்குருட்டினையொத்து உழல்வேற்கு - மித்தியாமார்க்கத்திற் பிரவேசித்தலைகின்ற எனக்கு, நற்காட்சி-நல்லதரிசனத்தை, தந்த - கொடுத்த, மற்றவர்க்கு - ஆசாரியர் முதலியமூவர்க்கு, செய்யதாளல்லது - அடிமையாகிப் பணிவிடைசெய்வதேயல்லாமல், ஏதும் - மற்றொன்றும், கைமாறிலை- பிரதியுபகாரமில்லை :(—எ - று) மற்றவரென்பது - ஆசிரியர் உபாத்தியாயர், ஸாதுக்கள், எனவாம் இது பஞ்சபரமேஷ்டிகளைப் புகழ்ந்ததாம்.

மாரு மனங்கொண்டு வானோர் தொழும்பிண்டி வாமன்மெய்ந்நூல்
தேரு தொழிந்த சிறுமா னிடரேன்ப தீமுதலாய்
நூரு யிரங்கொலை நோறு தெழுந்து விழுந்தொருகா
லாரு நெடுந்துய ரேழா நரக மடைபவரே 47

(இ - ள்.) தீமுதலாம் - தீயிற்போடுதல் முதலாகிய, நூருயிரங்கொலை கொன்ருலொத்த நூருயிரம் வருத்தங்களை, நோருது - சகிக்கமாட்டாமல், எழுந்து, வீழ்ந்தும் - வீழ்ந்தும் எழுந்தும், ஒருகால் - ஒருபோதும், ஆரு - ஒழியாத, நெடும் - நீடித்திருக்கும், துயர் - துன்பத்துக்கிடமாகிய, ஏழாநரகம் - ஏழாநரகத்தை, அடைபவர் - அடைந்தவர்களை, மாரு - இடைவிடாத, மனங்கொண்டு - மனத்தைக் கொண்டு, வானோர் - தேவர்களால், தொழும் - தொழப்பட்ட, பிண்டி - அசோகமரத்தின் கீழ் வீற்றிருக்கின்ற, வாமன் - அருகபரமேசுரராற் செய்தருளிய, மெய்நூல் - மெய்மை பொருந்திய பரமாகமத்தை, தேருது - உண்மையென்று உட்கொள்ளாமல், ஒழிந்த - நீங்கிய, சிறு - அற்ப புத்தியையுடைய, மானிடரென்ப - மனிதரென்று சொல்லுவார்கள் ;— (எ - று.)

அடையு மவருமை யென்கண் டடைகுவ ராசனமுங்
குடையு முதலிய விண்ணோர் குயிற்றிய கொய்சகஞ்சே
ருடையு மறுசுவை யூணுமொண் பூணுமொன் னுரைவெல்லும்
படையும் படைவிழி யாருமில் லாத பரம்பரரே 48

(இ - ள்.) உமை - உம்மை, அடையுமவர் - அடையவிரும்பினவர்கள், என்கண்டு - எதைக்கண்டு அடைகுவர் - சேர்வார், ஆசனமும் - ஆசனமும்,

குடையும் - குடையும், முதலிய - முதலியவைகளும், விண்ணோர் - தேவர்கள், குயிற்றிய - மணிகளைப் பதித்த, கொய்சகம் - பட்டாகி, சேர் - சிறந்த, உடையும் - வஸ்திரமும், அறுசுவை - அறுவகைப் பட்ட சுவையினையுடைய, ஊணும் - உணவுகளும், ஒண் - ஒளிபொருந்திய, பூணும் - ஆபரணங்களும், ஒன்னாரை - சத்துருக்களை; வெல்லும் - வெல்லத் தக்க, படையும் - ஆயுதங்களும், படை - வாள் போன்ற, விழியாரும் - மாதர்களும், இல்லாத - இல்லாத, பரம்பரனே - சிரேஷ்டமாகிய சுவாமியே. (எ - று.)

பரம்பற்றி நீங்கவொட் டாவினைப் பாசமெய்ப் பாவனைவாள்
அரம்பற்றி யீர்ந்தடி யேனுய்யப் போம்வண்ண மைவகைப்பூஞ்
சரம்பற்றி னன்வலி சாய்வித்த வீரனைத் தன்புகழ்போல்
வரம்பற்ற ஞானியை மாசற்ற சோதியை வந்திப்பனே. 49

(இ - ள்.) பரம் - மேலான குணங்களை, பற்றி - அனுசரித்து, நீங்கவொட்டா - நீங்கும்படி செய்யாத, வினை - வினையாலாகிய, பாசம் - ஆசையாகிய இரும்பை, மெய் - யதார்த்தமாகிய, பாவனை - தியான மென்று சொல்லப்பட்ட, வாள் - ஒளிபொருந்திய, அரம்பற்றி - அரத்தைக்கொண்டு, ஈர்ந்து - துணித்து அடியேனுய்ய - அடியேன் கடைத்தேற, போம் வண்ணம் - போகும்பொருட்டு, ஐவகை - ஐந்துவகை யாகிய, பூஞ்சரம் - புஷ்பபாணங்களை, பற்றினன் - பிடித்த மன்மதனுடைய, வலி - வல்லமையை, சாய் வித்த - கெடும்படி செய்த, வீரனை - அருகபரமே சுரரை, தன்புகழ்போல் - அவரது புகழ்போல், வரம்

பற்ற - அளவுகடந்த, ஞானியை - ஞானத்தையுடையவரை, மாசற்ற - குற்றமற்ற, சோதியை - முச்சோதியுடையவரை, வந்திப்பன் - வணங்குவன் :—(எ - று.)

வந்திக்க வும்புகழ் வாழ்த்தவுந் தாழ்த்தில வானமெல்லாங்
கந்திக்க மேற்கொள்ளுங் கார்க்கம லத்தெந்தை தாட்கமலஞ்
சிந்தித் தலும்பண்டைத் தீப்பரி ணமத்துத் தீவினையாற்
பந்தித் தவைபண்டை நுண்டுக ளாகிப் பறந்தனவே 50

(இ - ள்.) வந்திக்கவும் - வந்தனஞ் செய்யவும், புகழ் - கீர்த்தியை, வாழ்த்தவும் - துதிக்கவும், தாழ்த்தில - குறைவில்லாதனவாகிய வானமெல்லாம் - ஆகாயமெல்லாம், கந்திக்க - மணக்க, கார் - குளிர்ச்சி பொருந்திய, கமலத்து மேற்கொள்ளும் தாமரை - மலர்மேற் செல்லுகின்ற, எந்தை - எமதாண்டவருடைய, தாட் கமலம் - திருவடித் தாமரைகளை, சிந்தித்தலும் - தியானித்த வுடனே, பண்டை - அநாதியில், தீப்பரிணமத்து - மித்யாபரி ணமத்தாலுண்டாகிய, தீவினையால் - துஷ்கர்மத்தால், பந்தித்தவை - கட்டினவைகள், பண்டை - ஆதிகாலத்துப் போல, நுண்டுகளாகி - சிறியதுகளாகி, பறந்தன - பறந்து விட்டன - (எ - று). பண்டை - என்பதற்கு போலுமென்னும் உவமையுருபு வருவித்து - அநாதியில் வினைகள் - எங்ஙனஞ் சிறியனவாகக் கட்டினவோ - அங்ஙனமே நீங்குங் காலத்திலும் ஆயினவென்று பொருளுரைத்துக் கொள்க.

பறந்துபுக் குப்பர வாதிக டுன்னும் படுநரகுன்
அரந்தலைப் பட்டவர் கட்கடைத் தேநிற்கு மார்வமுள்ளிட்
டிறந்தமுக் குற்றத்தெம் மீசநின் னேயர்கட் கென்றெதிரே
திறந்துநிற் குஞ்சித்தி நன்னகர் வாயிற் றிருக்கதவே. 51

(இ - ள்). பரவாதிகள் - பரசமயத்தார், பறந்து - விரைந்து, புக்கு - சேர்ந்து, துன்னும் - அழுந்துகின்ற, படுநரகு - கொடியநரகமானது, உன் - உன்னுடைய, அறம் - ஸ்ரீ தர்மத்தில், தலைப்பட்டவர்கட்கு - சேர்ந்தவர்களுக்கு அடைந்தே நிற்கும் - அடைக்கப்பட்டே கிடக்கும், ஆர்வம் - ஆசையை, உள்ளிட்டு - முதலிட்டு, இறந்த - நீங்கிய, முக்குற்றத்து - மூன்று குற்றங்களையுடைய, எம் - எமது ஈச - சுவாமியே, நின் - நுமது, நேசர்கட்கென்று - அன்பர்களுக்காகவே, எதிர் - எதிராக, சித்தி - முத்தியாகிய, நல் - நல்ல, நகர் - நகரத்தினுடைய, வாசல் - வாயிலின், திருக்கதவு - அழகிய கதவானது, திறந்து நிற்கும் - திறக்கப்பட்டு நிற்கும் - (எ - று). முக்குற்றமிறந்த எம்மீச னென்பதற்கு - இறந்த முக்குற்றத்து ஈசனென்று, வடநூல் வழக்குப்பற்றி சொன்னர் - இதனல், பரவாதிகளுக்கு - நரகின் திறப்பும், வீட்டினடைப்பும், ஜிந தர்மத்தார்க்கு - நரகினடைப்பும், வீட்டின் திறப்பு முண்டாதல் கூறப்பட்டது.

கதமொழி தீர்மின் கறுவுக டேய்மின் கருணைநெஞ்சோ
டிதமொழி கூறுமி னின்னுயி ரோம்புமி னெப்பொழுதுஞ்
சுதமொழி கேண்மின் சுகமிக வேண்டிற் றுறவர்சொன்ன
வதமொழி யேன்மி னிவைசிந ஞர்திரு வாய்மொழியே. 52

(இ - ள்). சுகம் - பேரின்பத்தை, மிக - மிகவும், வேண்டின் (அறிவுடையோரே) விரும்பினால், கத மொழி - கோபத்தோடு கூடிய வார்த்தைகளை, தீர்மின் - தவிர்ப்பீராக, கருவுகள் - (அதற்குக் காரணமாகிய) கோபக் குறிப்புகளையும், தேய்மின் - சுருங்கச் செய்வீராக, கருணை நெஞ்சோடு - தயை பொருந்திய மனதோடு) இதமொழி கூறுமின் - (பிறருக்கு) இதமான வார்த்தைகளைச் சொல்லுங்கள், இன் - அத்தற் கினிமையாகிய, உயிர் - யாதொருயிரையும், ஓம்புமின் - (கொலை செய்யாது) காப்பாற்றுங்கள், எப்பொழுதும் - எவ்வேளையிலும், சுதமொழி - பரமாகமத்தை, கேண்மின் - கேட்கக் கடவீராக, துறவர் - பெரியோரால், சொன்ன - சொல்லியருளிய, வத மொழி - விரதங்க (அனுஷ்டிக்க வேண்டுமென்கிற) வார்த்தைகளை, ஏன்மின் - அங்கீகரிப்பீராக, இவை - இப்போது சொல்லிய விஷயங்கள், ஜிநனர் - அருகதேவருடைய, திருவாய் - திருவாயினின்றெழுந்த, மொழியே - திவ்யவார்த்தைகளேயாம் - (எ - று).

மொழித்தே னியம்புமும் மூடர்சொற் கொண்டு முனைவன் மெய்ந்நூல்
பழித்தேன் மயரிகள் சொற்பொருட் கொண்டுமைப் பானலன்ன
விழித்தே னெழுங்குர லார்க்கிடர் கொண்டு விலங்குகள் போற்
கழித்தேன் மதிமந்த மாயே யருமந்த காலத்தையே......... 53

(இ - ள்). தேன் - தேன்போல, மொழி - வார்த்தைகளை, இயம்பும் - இனிப்பாகப் பேசும், மும் மூடர் - (இதர தெய்வங்களிடத்தில் பக்தி செய்கின்ற) மூடருடைய, சொற்கொண்டு - (பொய்யாகிய) சொல்லை யேற்றுக்கொண்டு, முனைவன் - அருகரது,

மெய் - மெய்யாகிய, நூல் - நூலினை, பழித்தேன் - தூஷித்தேன், மயரிகள் - காமுகரது, பொருள் - (பயனற்ற) பொருள்தங்கிய, சொல் - சொல்லை, கொண்டு - ஏற்றுக்கொண்டு, மை - மையினைத் தரித்த, பானல் - நீலோற் பலமலர்களை, அன்ன - ஒத்த, விழி - கண்களையுடைய, தேன் - வண்டுகள், எழும் - சஞ்சரிக்கின்ற, குழலார்க்கு - கூந்தலுள்ள மகளிர்க்காக, இடர்கொண்டு - துன்பப்பட்டு, விலங்குகள் போல் - மிருகங்கள்போல, மதி மந்தமாய் - புத்தி மந்தமாய், அருமந்த - அரிதாகிய அமிர்தம் போன்ற, காலத்தை - காலத்தை, கழித்தேன் - கழித்து விட்டேன் - (எ - று). மூடர் சொல்லுகிற விஷயங்கள் செய்தற்குச் சுலபமாதலால் மொழிந்தேனென்றும் அவையும் நெறிவிலக் காயிருத்தலால் அவற்றைச் சொன்னவர்களை மூடர்களென்றுங் கூறினர், முனைவன் என்பது, மேலான கடவுளெனப் பெறப்பட்டது, அக்கடவுளால் கூறப்பட்ட நூல் உண்மையாதலின் மெய்ந்நூலாயிற்று, அதனை உய்த்துணராமல் பழித்தல் கொடும்பாவ மிகுதியாலென்க, மயரிகள் - மதனனூல் கற்றோர், மயல் - என்பது போலியில் மயரென்றாகி வினைமுதற் பொருளுணர்த்தும் இகர விகுதியோடு புணர்ந்து பன்மைக்காக கள் விகுதி வந்து மயரிகளென்றாயிற்று, ஆகவே மயக்கத்தையுடையவர்களென்பதாம். அவர்கள் சொன்ன வார்த்தை உறுதிப் பொருளாகக் கொண்டமையால் சொற்பொருள் கொண்டென்றார், அஃதாவது - முற்றிழை முலையார் முலைமுகடழுந்தக், கைத்தல மிரண்டிற் களிப்புறத்தழீஇ - வாயமுதுண்டு பல்வகையிற்

புணர்ந்து நாளொரு கணமென நண்ணவாழ்தலே - வீட்டையும் நெறியென்று கொள்ளுதலாம். குழலார்க்கு இடர்கொண்டென்பதனல் காமநூல் கற்றேன் பத்மினி, சித்தினி முதலிய ஸ்திரிகளை ஆராய்ந்து அகப்படாமல் விசனப்படுவனென்பதும் அத்தன்மையை யுடைய மாதர்கள் - தாம்புணரக் கூடாத முறையினராயிருக்கினும் அதனை நீக்கிச் சேர்தலால் விலங்குகள்போல என்றும் பாப மிகுதியால் பூசர, கேசர - ஜலசர விலங்குகளாகப் பிறவாமல் மோக்ஷம் அடைகிறதற்கு உபயோகியாகிய மானுட ஜன்மத்தின் வாழ் நாட்கள் மிகவும் பயனுள்ளன வாதலின் அருமந்த காலத்தினை என்றும் அதைச் சற்றும் எண்ணுமல் மேற் சொன்ன கெட்ட விஷயத்தால் போக்கடித்தலால் கழித்தேன் என்றும் இத்துணையும் பின்னுணர்ந்து இரங்குதலால் இப்புத்தி அக்காலத்தில் மழுங்கியிருந்ததென்பார் (மதி மந்த மாயே) என்றும் கூறினர். மயரிகள் என்பதற்கு உலோகாயுதனெனப் பொருள் கூறி அவர்கள் வார்த்தையைக் கொண்டெனினும் பொருந்தும் அவர்களிம்மையில் மாதர் போகமே மோக்ஷமென்று சொல்லுதலா லென்க. முழுமூடர் மும்மூடரெனத் திரிந்தது.

காலங் கழிதொறுங் கோலங் கழியக் கறுத்தகுஞ்சி
நீலங் கழிதர நீருங் கழிதிர் நிருமலன்ருண்
மூலங் கழிதல்செய் யாதுய்ம்மி னென்னினு மூர்க்கரந்தோ
வேலங் கழிவிழி யார்வலைக் கேபட்டு வீடுவரே. 54

(இ - ள்). காலம் - ஒருவனுக்கு வாழ் நாட்கள், கழிதொறும் - ஒவ்வொன்ருக நீங்குந்தோறும், கோலம் - அழகும், கழிய - ஒழிய, கருத்தகுஞ்சி - கருமையாகிய சிகையினது, நீலம் - கார் நிறமும், கழிதர - நீங்கி, வெண்மைநிற முண்டாக, நீரும் - நீங்களும், கழிதிர் - இறக்கின்றீர். நிருமலன் - அருகபரமனுடைய, தாள் மூலம் - திருவடியினின்றும், கழிதல் செய்யாது, தியானத்தால் நீங்கல் செய்யாது, உய்ம்மின் - பிழையுங்கள், எனினும் - என்றறைந்தாலும், மூர்க்கர் - மூர்க்கர்கள், அந்தோ - ஐயோ, வேல் - வேலை, கழி - தோர்க்கச் செய்து துரத்துகின்ற, விழியார் - கண்களையுடைய மாதர், வலைக்கே - ஆசையாகிய வலையிலே தானே, பட்டு - மயங்கி, வீடுவர் - சாவார்கள் (எ - று).

வீடும் வினைகளின் பந்தமு மெய்ம்மை விரித்துரைத்த
நீடு மலர்ப்பிண்டி நின்மல நின்மலர்ப் பாதநன்னீ
ராடு மவர்க்கர மங்கைய ராடுவ ரண்ணனின்சீர்
பாடு மவரையிம் மூவுல கோர்களும் பாடுவரே. 55

(இ - ள்). வினைகளின் - வினைகளினுடைய, வீடும் - நீங்குதலும், பந்தமும் - கட்டுதலும், மெய்மை - மெய்மையாகிய வேதங்களை, விரித்துரைத்த - விளங்கச் செய்தருளிய, நீடுமலர் - என்றும் வாடாமலிருக்கின்ற பூக்களையுடைய, பிண்டி - அசோகவிருக்ஷத்தின்கீழ் வீற்றிருக்கின்ற, நின்மல - மலரகிதராகிய சுவாமியே, நின் - நுமது - மலர் - தாமரை மலர் போன்ற, பாதம் - பாதத்திலபிஷேகஞ் செய்த, நன்னீர் - திவ்ய உதகத்தை, ஆடுமவர்க்கு-எடுத்து தெளித்

துக் கொள்ளுகிவர்களுக்கு, அரமங்கையர் - தெய்வப் பெண்கள், ஆடுவர் - நாட்டியஞ் செய்வர், அண்ணல் - சிரேஷ்டராகிய அருகரே, நின்சீர் - உமது மகிமையை, பாடுமவரை - பாடுகின்றவர்களை, இம் மூவுலகோர்களும் - இம்மூன்றுலோகத்திலுள்ளவர் களும், பாடுவர் - துதிப்பர் (எ - று). அரமங்கயராடுவ ரென்பதனால் பாதநீரைத் தரித்துக்கொள்பவர் இந்திரப்பதவியைப் பெறுவரென்பதாயிற்று.

பாடுவ னேசில பாதகத் தேவரைப் பன்னெறிமே
லோடுவ னேநின் னொருநெறி கண்டுபண் டுன்னையுன்னு
வேடுவ னேனின் னறத்தினை வித்தி விளைத்துணப்பெற்
றுடுவ னேயின்னு மாருயிர் வேட்டை யதிசயனே. 56

(இ - ள்). அதிசயனே - ஒப்பற்ற மூன்றதிசயங் களையுடைய சுவாமியே, சில - சிலராகிய, பாதகத் தேவரை - பாதகத்தைச் செய்யும் தேவர்களை, பாடு வனே - தேவரீரைப்பாடின நாவாலே பாடுவேனோ, நின் - நுமது, ஒரு - ஒப்பற்ற, நெறி-சன்மார்க்கத்தை, கண்டு - அறிந்தும், பன்னெறிமேல் - பலவாகிய வழி களில், ஓடுவனே - சேருவேனோ, பண்டு - ஆதியில், உன்னையுன்னு - உம்மைக் கருதாத, வேடுவனே - வேடனை யொப்பக் கொலைபுரிந்தேனாகிலும், நின் னறத்தினை - நுமது ஸ்ரீ தர்மமாகிய விரையை, வித்தி - விதைத்து, விளைத்து - விளையப்பண்ணி, உணப்பேற்று அனுபவித்தும், இன்னும் - மேலும், ஆருயிர் - அரிய உயிர்களை, வேட்டை - கொல்லுதல் ஆடுவனே - செய்வேனோ. (எ - று). மூன்றதிசய

மாவன - ஸஹஜாதிஸயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீ காதிசயம், எனவாம்.

அதிசோக மோடய லார்களைப் போலடுங் கூற்றம்வந்தான்
மதிசோர் தரமயங் கிக்கிட வோமலர் மேனடந்தார்
துதிசே ரிணையடி யாந்துணை யோடவர் தொல்லறமாம்
பொதிசோ றுடைய மிடையோ மினித்தனிப் போநெறிக்கே. 57

(இ - ள்). அடும் - உயிரைப் பிடிக்கின்ற, கூற்றம் - எமனானவன், வந்தால் - அடைந்தால், அயலார்களைப்போல் - ஞானமில்லாராகிய அன்னியமதத்தர்களைப் போல், அதிசோகமோடு - அதிசோகத்துடனே, மதி - புத்தியானது, சோர்தர - சோரும்படியாக, மயங்கி - மூர்ச்சையடைந்து, கிடவோம் - கிடக்கமாட்டோம், மலர்மேல் - தாமரைப் பூமேல், நடந்தார் - நடந்தருளுகின்ற அருகக் கடவுளது, துதிசேர் - ஸ்துதி பொருந்திய, இணையடியாம் - உபய பாதங்களாகிய, துணையோடு - துணையுடனே, அவர் - அவரால் அருளிச்செய்யப்பட்ட, தொல் - பழமையாகிய, அறமாம் - தர்மமென்கிற, பொதி சோறு - கட்டமுதினை, உடையம் - பெற்றிருக்கின்றோம், இனி - இனிமேல், தனி - தனியாக, போம் - போகின்ற, நெறிக்கு - முத்திக்குச் செல்லும் மார்க்கத்திற்கு, இடையோம் - பயப்படமாட்டோம் - (எ - று).

நெறிச்சென் றொருவண்ண நின்னற மாகிய நீணிலைச்செந்
தறித்தங் கியவென் மனத்தனி யானை தளைபரிந்தைம்
பொறிப்பன்றி யோடைம் புலன்களும் புக்கழி யாமலின்னுங்
குறிக்கொண் டருளுகண் டாய்பிண்டி நீழற் குணதரனே. 58

(இ-ள்). பிண்டி நீழல் - அசோக நிழலின் கீழெழுந்தருளியிருக்கின்ற, குணதரனே - குணங்களைத் தரித்தபரமரே, நெறி - மித்தியா மார்க்கத்தே, சென்று - அடைந்து, ஒருவண்ணம் - ஒரு வகையாக, நின் - நுமது: அறமாகிய - தர்மமாகிய, நீள் - நீண்ட, நிலைபெற்று - உறுதியாகிய, செம் - செவ்விய, தறி - கட்டுத்தறியில், தங்கிய - நின்ற, என் - எனது, மனத்தனியானை - மனமாகிய தனி யானையினது, தளை - நிகளத்தை பரிந்து - அறுத்து, ஐம்பொறிப் பன்றியோடு - ஐம்பொறிகளாகிய பன்றியுடனே, ஐம்புலன்களும் - ஐந்து விஷயமாகிய கழனிகளிலும் புக்கு - புகுந்து, அழியாமல் - விரதங்களாகிய பயிர்களை அழிக்காமல், இன்னும் - மித்தியாத்துவத்தினின்றும் ஆட்கொண்டது போல் இன்னமும், குறிக்கொண்டு - எண்ணங்கொண்டு, அருளும் கண்டாய் - இரக்ஷித்தருளும் - (எ - று).

குணதர ரேமுனி மங்கைய ரேகொலை நேர்விலங்கே
பணதர ரேமுத லுற்சுர ரேயவர் பாவையரோ
டணதரு நேமி யரதன ரேயன வாறிருமாக்
கணதர ரேறுசெந் தாமரை காணெங் கருந்தலையே. 59

(இ-ள்). குணதரர் - முனிவர்களும், முனிமங்கையர் - ஆரியாங்கனைகளும், கொலை - கொல்லுந் தொழில், நேர் - விட்டு, உடன்பட்ட, விலங்கு - விலங்கு சாதிகளும், பணதரரே முதல் - பவணர் முதலான, நாற்சுரர் - நால்வகைத் தேவர்களும், அவர் - அத்தேவர்களுடைய, பாவையரோடு - மனைவியரோடும், அணவரும் - பொருந்திய, நேமி - சக்ரமாகிய, அர

தனர் - இரத்தினத்தையுடையவரும், என - என்று, ஆறிரு - பன்னிரண்டாகிய, மா - பெருமை பொருந்திய, கணதரர் - கணங்களைத்தரித்த, அருகக்கடவுள், ஏறு - ஏறுகின்ற, செம் - செவ்விய தாமரைகாண் - தாமரைமலராகும், எம் - எம்முடைய, கரும் - பெரிய, தலை - தலைகள் - (எ - று). யாம் பிறரை வணங்கோமென்பதாம் - கொலை நேர் - என்பதற்கு கொலைவிட்டு நேர்ந்தன - இடையில் ஒரு சொல் வருவிக்க ஏகாரம் - ஆறும் எண்ணில்வந்தன.

கருந்திரை காணினும் வெண்ணரை காணினுங் காட்சியுள்ளிட்
டருந்திர யந்தந்த வண்ணலைக் காண்கில ரார்கலிவாய்
வருந்திரை யோய்வதும் போம்புனன் மாய்வது மாத்திரையிற்
பருந்திரை கொள்ளமெய் வீழ்வது காணும் பளகர்களே. **60**

(இ - ள்). ஆர்கலிவாய் - கடலினின்றும், வரும் - வருகிற, திரை - அலைகள், ஓய்வதும் - கரையருகே வந்து ஓய்வதும், போம் - பிரவாகமாகியப் போகின்ற, புனல் - ஜலமானது, மாய்வதும் - போகப்போகச் சுருங்குவதும் போல், மாத்திரையில் - க்ஷணப் பொழுதில், பருந்து - பருந்துகள், இரைகொள்ள - இரையாகப்பெற்றுக் கொள்ள மெய் - உடலானது, வீழ்வது - இறப்பதை, காணும் - பார்த்துக்கொண்டிருக்கின்ற, பளகர்கள் - மூடர்கள், கரும் - மிகுந்த, திரை - திரைதலை, காணினும் - தமதேகத்திற் கண்டாலும், வெண்ணரை - வெளுப்பாக நரைத்தலை, காணினும் - கண்டாலும், காக்ஷியுள்ளிட்ட - சம்மியத் தரிசனத்தை முதலிட்ட, அருந்திரயம் - அருமையானரத்நத்திரயத்தை, தந்த - அரு

விச் செய்த, அண்ணலை - சுவாமியை, காண்கிலர் - காணுதற்கு வேண்டிய முயற்சி செய்திலர் - (எ · று).

பளகரெல் லாமனைப் பாரம் பரித்தனர் பல்வினைக்கே
யுளகரெல் லாமொத் தொவ்வாநெறி நின்றன ரோடரிக்கண்
ணளகமெல் லோதியர்க் கார்வமில் லாவற வேந்தவந்தச்
சளகரல் லாத சதுரர்நின் வேடந் தரித்தனரே. 61

(இ - ள்.) பளகரெல்லாம் - மூடரெல்லாம், மனை பாரம் - சம்சாரபாரத்தை, பரித்தனர் - தாங்கி நின்றார்கள், பல்வினைக்கே - பலவாகிய வினைகளுக்கே, உளகரெல்லாம் - உள்ளாவரெல்லாரும், ஒத்து - மெய்நெறி நடப்பவர் போன்று, ஒவ்வாநெறி - மித்தியாமார்க்கத்தில், நின்றனர் - நின்றார்கள், ஓடு - காதளவு மோடாநின்ற, அரி - செவ்வரி பரந்த, கண் கண்களையுடைய, மெல் மிருதுவாகிய, அளகவோதியர்க்கு - கூந்தலையுடையமாதர்க்கு. ஆர்வமில்லா - ஆசைப்படாத, அறவேந்த - தர்மசக்கிரத்தையுடைய சுவாமியே, அந்தச்சளகர் - அப்படிபட்ட குற்றமுள்ளவர்கள், அல்லாத - அல்லாத, சதுரர் - யோக்கியர்கள், நின்வேடந்தரித்தனர் - நுமது வேடத்தைப் பூண்டுகொண்டார்கள் : (எ - று.)

வேடந் தரித்து விதியந் தரிக்க வொழுகிமெய்ந்நூல்
பாடந் தரித்துண்மை பாரா முனிவரிற் பாயரிமான்
பீடந் தரிக்க விருந்தபெம் மானறம் பேணலின்றி
மூடந் தரித்தெண் மயத்துநின் றார்நல்லர் மும்மடியே. 62

(இ - ள்.) வேடம் - தவவேடத்தை, தரித்து - பூண்டு, விதிசெய்யவேண்டிய கருமமானது, அந்தரிக்க - பேதிக்க, ஒழுகி - நடந்து, மெய்ந்நூல் - பரமாகமத்தை, பாடந்தரித்து - ஓதியுணர்ந்து, உண்மைபாரா - உண்மைப் பொருளைத்தெரியாத, முனிவரின் - முனிவரைக்காட்டிலும், பாய் - பாய்ந்து செல்லுகின்ற, அரிமான் - சிங்கந்தாங்கிய, பீடம் - ஆசனமானது, தரிக்க-தாங்க, இருந்த - எழுந்தருளியிருந்த, பெம்மான் - அருகபரமரது, அறம் - ஸ்ரீ தர்மத்தை, பேணலின்றி - காவாமல், மூடம் - மூவகை மூடத்தையும், தரித்து - அடைந்து, எண்மயத்து - எண்வகைச் செருக்கில், நின்றூர் - நின்றவர்கள், மும்மடி - மூன்றத்தனை, நல்லர் - நல்லவராவார்கள் :—

(எ - று.) மூவகைமூடமாவன - உலோகமூடம் - தேவதாமூடம் - பாஷண்டிமூடம் என்பன எண்வகை செருக்காவது, பிறப்பு, குலம், வலி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு, எனவாம்.

மும்மடி சூழ்ந்த முழுவொளி நாத ரெழுஞ்சுடருக்
கம்மடி நல்ல வடியிணை தாங்கினு நண்ணுதற்குத்
தம்மடி யேன்மனம் போலவற் றேதலை மீதுகொள்ள
வம்மடி கேளென்ன மாட்டா முளரி மதுமலரே. 63

(இ - ள்.) தலைமீது - சிரசின்மேல், கொள்ள - தாங்கிக்கொள்ள, அடிகேள் - சுவாமிகளே, வம்மின் - வாரீர், என்னமாட்டா - என்று சொல்லமாட்டாத, மது - தேன் பொருந்திய, முளரிமலர் - தாமரை மலரானது, மும்மடி - மூன்றுமடிப்பாக, சூழ்ந்த - வளைந்த, முழு - முழுமையாக நிறைந்த, ஒளிநாதர் -

பிரபாவல்யத்தை யுடைய சுவாமியினது, எழும் - உதயமாகின்ற, சுடருக்கு - சூரியனைக் காட்டிலும், அம் - ஒளியினழகானது, மடி - அதிகரித்திருக்கின்ற, நல்ல - சுபத்திற் கிடமான, அடியிணை - இரண்டு திருவடிகளையும், தாங்கினும் - சுமக்கினும், நண்ணுதற்கு - அடைகிறதற்கு. அடியேன் - அடியேனது, மனம்போல - மனதுபோல, வற்றே - வலிமையுடையதோ. (எ - று) தம் - அசை; வம்மின், வரவேண்டுமிடத்து வம் எனவந்தது.

மலந்தோய் வயிறுமம் மாநர கங்களு மண்ணும்விண்ணுங்
கலந்தே கிடந்த வுலகொரு மூன்றுங் கவர்தருமைம்
புலந்தோய் பொறியுடைப் பொய்த்தேவர்கள்புன் னெறிகளும்புக்
கலைந்தே னரவிந்த வூர்தி யினியென்னை யஞ்சலென்னே 64

(இ - ள்.) மலம் - மலமானது, தோய் - தோய்ந்த வயிறும் - வயிற்றினையுடைய மானுடகதியிலும், அ - அந்த, மா - கொடிதாகிய, நரகங்களும் - நரக கதியினும், மண்ணும் - விலங்கின்கதியிலும், விண்ணும் - தேவகதியிலும், கலந்து - விரைவி, கிடந்த - தங்கிய, உலகொருமூன்றும் - ஒப்பற்ற மூன்றுலகத்தையும், கவர்தரும் - கிரகிக்கின்ற, ஐம்புலம் - பஞ்சவிஷயத்திலும், தோய் - சேர்ந்த, பொறியுடை - பந்தத்தை யுடைய, பொய்த்தேவர்கள் - பொய்த்தேவர்களுடைய, புன்னெறிகளும் - அற்பமார்க்கங்களிலும் புக்கு - அடைந்து, அலைந்தேன் - உழன்றேன், அரவிந்தவூர்தி - தாமரை புஷ்பமாகிய வாகனத்தையுடையவரே, இனி - இனியாயினும், என்னை - அடி

யேனே, அஞ்சலென்னே - அஞ்சலென்றருள்செய்யும் (எ - று.)

என்னையிம் மண்ணுல கத்தோ ரியற்கை யிறைவரல்லாத்
துன்னய வாதிகள் சொற்பொரு ணம்புவர் தூமணிசேர்
பொன்னெயின் மன்னிய புங்கவவங்கவர் பொய்ம்மைகண்டும்
பின்னையு நின்னறந் தேருர் கிடந்து பிணங்குவரே. 65

(இ - ள்). பரிசுத்தமாகிய, மணிசேர் - ரத்னங்கள் பதித்த, பொன்னெயில் - பொன்னுலாகிய மும்மதில் சூழ்ந்த ஸமவசரணத்தில், மன்னிய - வீற்றிருக்கின்ற, புங்கவ - சுவாமியே, இம் மண்ணுலகத்தோர் இவ்வுலகத்திலுள்ளோர், இயற்கை - சுபாவமானது, என்னை - என்னே, இறைவரல்லா - கடவுளல்லாத, துன்னயவாதிகள் - துர்நீதியைச் சொல்லுகின்றவர்கள், சொல் - சொல்லாநின்ற, பொருள் - பொருளினை நம்புவர் - நம்புவார்கள், அங்கவர் - அந்த துர்த்தெய்வங்களுடைய, பொய்மை கண்டும் - பொய்த் தன்மையை யறிந்தும், பின்னையும் - பிறகாயினும், நின் - நுமது, அறம்-ஸ்ரீ தர்மத்தை, தேருர்- நிஜமென்று தெளியாதவராகி, கிடந்து - அதிலேயே அழுந்தி, பிணங்குவர் - மாறுபடுவார்கள் - (எ - று.)

பிணங்கோ மெவரொடும் பேரோஞ் சிநனறம் பேர்படைத்துங்
குணங்கோ டியகுப தக்கொடுந் தேவர்தங் கோயில்கண்டால்
வணங்கோ மனங்கொண்டு வாழ்த்துகி லோமவர் மானிடரோ
டிணங்கோ மெழுமையு மென்கட வோமவ் விருவினைக்கே. 66

(இ - ள்). எவரொடும் - யாவரோடும், பிணங்கோம் - மாறுபடோம், சினவறம் - ஜினதர்மத்தினின்றும், பேரோம் - நீங்கோம், பேர்படைத்தும் - நல்ல பேர்களைப்படைத்தும், குணம் - குணங்கள், கோடிய - மாறுபட்ட. குபதம் - அற்பமார்க்கத்தையுடைய, கொடு - கொடுமையாகிய, தேவர்தம் - இதரதேவதைகளுடைய, கோயில்-ஆலயத்தை கண்டால்-பார்த்தால், வணங்கோம் - வந்தனஞ் செய்யோம், மனங்கொண்டு - மனதுட்கொண்டு, வாழ்த்துகிலோம் - ஸ்துதிபண்ணோம். அவர் மானிடரோடு - மித்தியாதேவதை களுடைய அடியாரோடு, இணங்கோம் - நட்புச் செய்யோம், அவ்விரு வினைக்கு - அவ்விரு வினையினின்றும், எழுமையும் - ஏழ் பிறப்பினையும், என்கடவோம் - ஏன் கடக்க மாட்டோம்—: (எ - று).

இருவினை வேலை யொருவினை நீயெரி சேர்புரிபோ
லுருவினை யேனு மருவினை நீயொரு வர்க்குமில்லாத்
திருவினை நீயெண் டிசைமுக னீசிறந் தோங்குபிண்டித்
தருவினை நீயருட் சக்கர மேந்திய சங்கரனே. 67

(இ -). அருட்சக்கரம் - தர்மசக்கரத்தை, ஏந்திய - தரித்த, சங்கரனே - சுகத்தைக்கொடுக்கும் பரமரே நீ - நீர், இருவினை - நல்வினை தீவினையாகிய, வேலை - சமுத்திரத்தினின்றும், ஒருவினை - நீங்கினீர், எரி - நெருப்பினை, சேர் - அடைந்த, புரிபோல் - வைக்கோற் புரி போல, உருவினையேனும் - பார்ப்போர்க்கு உருவமுடையீராகத் தோன்றினீராயினும், நீ - நீர், அருவினை - அரூபியாயிருக்கின்றீர். ஒரு

வர்க்கு மில்லாத - ஒருவர்க்குங்கிட்டுதலில்லாத திரு விளை நீ - மோக்ஷலக்ஷ்மியையுடையவராயிருக்கின் றீர், எண் - மதிக்கத்தக்க, திசைமுகனீ - அதிசயத் தால் நான்கு திருமுகங்களையுடையவராயிருக்கின் றீர், சிறந்து - சிறப்பு பொருந்தி, ஓங்கு - உயர்ந்த, பிண் டித் தருவினை - அசோக விருக்ஷத்தை யுடையவரா யிருக்கின் றீர் :—(எ - று).

சங்கையஞ் சார்தளர் நோய்க்கிடை யார்தழல் போல்விழித்து
வெங்கயஞ் சாரினு மெய்ந்நடுங் கார்விரை யார்களபக்
கொங்கையஞ் சாயலர் கோலநம் பார்வருங் கூற்றமுட்கார்
பங்கயஞ் சார்பத பங்கயத் தானடிப் பத்தர்களே. **68**

(இ - ள்). பங்கயம் - தாமரைபூவை, சார் - சார்ந்து நடக்கின்ற, பாதபங்கயத்தான் - தாமரை மலர் போன்ற பாதத்தை யுடைய அருகபரமரது அடி - முக்கியமான, பத்தர்கள் - அடியார்களை, சங்கை - யாதொரு விசாரத்திற்கும், அஞ்சார் - பயப்டார், தளர் - தளர்ச்சியைக் கொடுக்கின்ற, நோய்க்கு - பிணிக்கு, இடையார் - இடையமாட்டார்கள், தழல் போல் - நெருப்பு நிறம்போல, விழித்து - விழித்து, வெங்கயம் - கொடிய யானையானது, சாரினும் - தம்மையடைந்தாலும், மெய் நடுங்கார் - சற்றும் உடம்பு நடுங்கார், விரையார் - வாசனை பொருந்திய, களபம் - களபச் சாந்தைப் பூசிய, கொங்கை - முலையும், அம் - அழகிய, சாயவர் - சாயலையுமுடைய மாதரது, கோலம் - அழகை, நம்பார் - உண்மை யென்று நம்பார், வரும் - வறுகின்ற, கூற்றம் - எமனுக்கும், உட்கார் - அஞ்சார் :—(எ - று).

பத்தர்நற் சித்தனைப் பன்னிரண் டோசனைப் பொன்னெயில்சே
ரத்தனைப் பண்டறி யாமையில் யானனந் தம்முயிர்கட்
கெத்தனை தந்தையுந் தாயரு மாயின னின்றெனக்கே
யெத்தனை தந்தையுந் தாயரு மானரென் றெண்ணுவனே. 69

(இ - ள்). பத்தர் - அடியார்களுடைய, நல் - நல்ல, சிந்தனை - சித்தத்திலிருப்பவரை, பன்னிரண் டோசனை - பன்னிரண்டோசனை அகலமுடைய, பொன்னெயில் சேர் - பொன்மதில் சூழ்ந்த ஸமவசரணத்திலிருக்கின்ற, அத்தனை-சுவாமியை, பண்டு-முற் காலத்தில், அறியாமையில் - அறியாமையினால், யான் - நான், அனந்தம் உயிர் கட்டு - அநேக ஜீவ ராசிகளுக்கு, எத்தனை - எத்தனை தரம், தந்தையும் - பிதாக்களும், தாயாரும் - தாயார்களும், ஆயினன் - ஆயினேன், என்றனக்கே - எனக்கே, எத்தனை - எத்தனையோதரம், தந்தையும் - பிதாக்களும், தாயாரும் - தாயார்களும், ஆன ரென்று-ஆயினரென்றும். எண்ணுவன் - நினைப்பேன் (எ - று). இடைநிலையின் இகரம் விகாரத்தாற் றொக்கு நின்றது.

எண்ணுடை மாலையொ டீர்படை கொண்டிடத் தும்வலத்தும்
பெண்ணுடை யார்சிலர் பேதைகட் கீசர் பெருந்திசையா
நுண்ணுடை நாதர் நுவன்ற வருங்கல மாகியமுக்
கண்ணுடை யாரிந்தக் காசினி மேனமக் கீசர்களே. 70

(இ - ள்). எண்ணுடை - எண்ணத்தகுந்த, மாலையொடு - மாலையுடனே, ஈர் - கொல்லுதற்குக் கருவியாகிய, படைகொண்டு - ஆயுதத்தைத் தரித்து, இடத்தும் - இடப்பாகத்திலும், வலத்தும் - வலப்பாகத்திலும், பெண் - மாதர்களை, உடையார் - உடையவர்

களாயிருக்கின்ற, சிலர் - சில தேவர்கள், பேதை கட்கு - மூடர்களா யிருக்கின்றவர்களுக்கு ஈசர் - தெய்வங்களாவார்கள், பெரு - பெருமை பொருந்திய, திசையாம் - திக்குகளாகிய, நுண் - நுட்பம் பொருந்திய, உடை - வஸ்திரத்தையுடைய, நாதர் - ஜிநேசுவரர், நுவன்ற - திருவாய் மலர்ந்தருளிய, அருங்கலமாகிய - அருமையுற்ற, ரத்தினத்திரயமாகிய, முக்கண் - மூன்று நேத்திரங்களை, உடையார் - உடைய முனிவர்கள், இந்தக் காசினிமேல் - இப்பூமியில், எமக்கு - எங்களுக்கு, ஈசர்கள் - கடவுளராயிருக்கின்றார்கள் - (எ - று).

ஈசனென் றாலு மிறைவனென் றாலு மிலங்கொளிமுத்
தேசனென் றாலுமெய்த் தீர்த்தனென் றாலுஞ்சித் தித்திருவி
னேசனென் றாலுமென் னெஞ்சு ளிருந்திந்த நீணலத்தோர்
பேசநின் றார்தமக் கேயுநின் றரவர் பேரர்களே. 71

(இ - ள்). ஈசனென்றாலும் - சகலசம்பத்துக்களையுடையவ ரென்றாலும், இறைவனென்றாலும் - யாவர்க்கும் தலைவரென்றாலும், இலங்கு - பிரகாசிக்கின்ற, ஒளி - காந்தியையுடைய, முத்தேசனென்றாலும் - மூன்று பிரபாவலய முடையவரென்றாலும், மெய் - மெய்மையாகிய, தீர்த்தனென்றாலும் - தர்மப் பிரவர்த்தகரென்றாலும் - சித்தி - மோக்ஷமாகிய, திருவின் - லக்ஷ்மிக்கு, நேசனென்றாலும் - பிரியரென்றாலும், என்னெஞ்சுள் - அடியேனுடைய மனதில், இருந்து - வீற்றிருந்து, இந்த நீணிலத்தோர் - இந்தப் பெரிய உலகத்திலுள்ளவர்கள், பேச - துதிக்க, நின்றார் தமக்கு - எங்கும் வியாபித்திருக்

கின்ற அருக பரமருக்கு, ஏயும் - பொருந்தும், நின் ரூரவர் - இவர் நீங்கலாக நின்ற மற்ற மித்தியா தேவதைகள், பேரர்கள் - இப்படிப்பட்ட நாம தேயத்தை மாத்திர முடையவர்கள் - (எ - று).

பேரா யிரத்திரு நான்குடை யானைப் பிறங்கியநற்
சீரா யிரத்திற் சிறந்துடை யானைநற் சித்திசெய்யுங்
காரா யிரத்தின மூன்றளிப் பானைக் கவிதைசெய்யா
தாரா யிரத்தி ரறியா தவரை யறிஞர்களே. 72

(இ - ள்). பேராயிரத்திருநான்கு - ஆயிரத் தெட்டு நாமங்களை, உடையானை - உடையவரை, பிரங்கிய - பிரகாசிக்கின்ற, நல் - நல்ல, சீராயிரத்தில் அநேகவகையாகிய சிறப்புகளால், சிறந்துடை யானை - பெருமை பெற்றிருக்கின்றவரை, நல் - நல்ல, சித்தி செய்யும் - மோக்ஷத்தைக் கொடுக்கின்ற, காராய் - மேகம் போன்று, இரத்தின மூன்று - இரத்தினத் திரயங்களை, அளிப்பானை - கொடுத்தருள் செய்கின்றவரைக் குறித்து, அறிஞர்களே - புத்தி யுள்ள மானிடர்களே, கவிதை செய்யாது - பாடல் செய்யாதவராய், அறியாதவரை - உண்மையறியாத வர்களை, ஆராய் - யாராக நினைத்து, இரத்திர் - பாடி யிரக்கின்றீர் - (எ - று).

அறியோ மருந்தமி ழாரியங் கேட்டில மாகமத்தும்
வறியோ மதுரக் கவிகளல் லோமனம் வேண்டியவைம்
பொறியோ டுழல்புன் புலமையி னேமெம் புலமையெல்லா
முறியோ டலர்பிண்டி யாரடி யாரென்னு முக்கியமே. 73

(இ - ள்). அருந்தமிழ் - அரியதமிழை, அறி யோம் - கற்றறிந்திலம், ஆரியம் - ஸம்ஸ்கிருதமொழி

யையும் கேட்டிலம் - கேட்டதில்லை, ஆகமத்தும் - பரமாகங்களிலும், வறியோம் - தரித்திரராயிருக்கிறோம், மதுரகவிகளல்லோம் - மதுரமான பாடலைச் செய்யுங்கவிகளல்லோம், மனம் - மனமானது, வேண்டிய - விரும்பிய, ஐம்பொறியோடு - பஞ்சேந்திரியங்களோடு, உழல் - அலைகின்ற, புன் - அற்பமாகிய, புலமையினேம் - கல்வியை மாத்திரங் கற்றிருக்கின்றோம், எம்புலமை யெல்லாம் - எம்முடைய கல்வி யெல்லாம், முறியோடு - தளிர்களோடு, அலர் - மலர்கள் பூத்த, பிண்டியார் - அசோக விருக்ஷத்தை யுடைய அருகபரமரது, அடியாரென்னும் - பக்தரென்று சொல்லப்பட்ட, முக்கியம் - சிலாக்கியந்தான் (எ - று). ஆகமத்தில் வறுமையாவது அதனைக் கல்லாமையாம். மேற்சொன்னவற்றில் ஒன்று மில்லாவிடினும் அடியாராயிருத்தலே சிறப்புள்ள தெனக் கூறியதாம்.

முக்குற்ற நீக்கிய நின்குண முன்புண ராமையில்யான்
புக்குற்ற தீக்கதி போயின வெத்தனை போனவற்று
ளெக்குற்ற மானதெல் லாமடி யேன்குற்ற மாட்புகுந்தே
னெக்குற்ற மெய்தினு மெம்பெரு மானதி னிக்குற்றமே. 74

(இ - ள்). முக்குற்றம் - மூன்று குற்றங்களையும், நீங்கிய - ஒழித்த, நின் குணம் - நுமது அனந்த ஞானதி குணங்களை, முன் - முற்காலத்தில் உணராமையின் - அறியாதிருந்தபடியால், யான் - நான், புக்குற்ற - அடைந்த, தீக்கதி - தீமையாகிய கதிகள், எத்தனை - எத்தனையோ, போயின சென்றன. போனவற்றுள் - அப்படி போகிய தீயமார்க்கங்களில்

செய்த, அக்குற்றமான தெல்லாம் - அப்படிப்பட்ட எல்லாக் குற்றங்களும், அடியேன் குற்றம் - அடியேனுடைய குற்றமே, ஆட்புகுந்தேன் - உமக்கடிமையாகப் புகுந்தேன், இனிக்குற்றம் - இனிமேல் என்னால் செய்யப்படுங் குற்றங்கள், எக்குற்றமாயினும் - எப்படிப்பட்ட குற்றங்களாயிருந்தாலும், எம்பெருமானது - எமதிறைவருடையதேயாம் - (எ - று).

குற்றம்விட் டார்குத்தி மூன்றுடை யார்செத்தி யீர்ந்தடினுஞ்
செற்றம்விட் டார்திரு மேனியெல் லாம்பெரு மாசுவிம்ம
வற்றவிட் டார்வினை மாசுதிர்ப் பார்பிண்டிவா மனல்லாற்
சுற்றம்விட் டார்திசை சூழ்துகி லார்நந் தொழுதெய்வமே. 75

(இ - ள்). குற்றம் - கொலை முதலாகிய குற்றங்களை, விட்டார் - ஒழித்தவர் - மூன்று - மனவாக்குக் காயம் மூன்றினையும், குத்தியுடையார் - அடக்கமாகவுடையார், செற்றி - வாய்ச்சியாற் செதுக்கி, ஈர்ந்தடினும் - பிளந்தாலும், செற்றம்விட்டார் - அவர்மேல் கோபத்தை விட்டவர்கள், திருமேனி யெல்லாம் - அழகிய தேகமுழுதும், பெருமாசு - மிகுந்த அழுக்கானது, விம்ம - அதிகப்பட, வற்றவிட்டார் - உலரவிட்டவர், வினைமாசு - தீவினையாகிய அழுக்கை, உதிர்ப்பார் - கெடுத்தவர்கள், பிண்டி - அசோக நீழலின் கீழ்வீற்றிருக்கின்ற, வாமனல்லால் - அருகதேவரல்லாமல், சுற்றம் விட்டார் - இருவகைப் பற்றையும் விட்டவர், திசை - திக்குகளையே, சூழ் - உடுக்கின்ற, துகிலார் - வஸ்திரமாகவுடைய அடியார்களே, நந்தொழுதெய்வம் - நாம் தொழத்தக்க தெய்வங்களாவார் - (எ - று).

தெய்வதம் வேறென்று தேடுகின் றீர்வினைத் தெவ்விரண்டா
னைவதல் லாதுமுத் திக்குநண் ணீரிரு நால்வினைதீ
ரைவத நாத ரறுபதம் போதென் றெழுபதஞ்சேர்ந்
துய்வதல் லாலுமக் குய்யு முபாயமற் றென்றிலையே. 76

(இ - ள்). வேறென்று - வேறொரு, தெய்வம் - தெய்வத்தை, தேடுகின்றீர் - தேடுகின்றவர்களே, தெவ் - சத்துருவாகிய, வினையிரண்டால் - நல்வினை தீவினை யிரண்டினாலும், னைவதல்லாது - வருந்துவதல்லாமல், முத்திக்கு - மோக்ஷத்தை, நண்ணீர் - அடையீர், இருநால்வினை-எண்வகைவினைகளும், தீர் - தீர்ந்த, ஐவதம் - பஞ்சவிரதத்தையுடைய, நாதர் - ஆதீசுரரது, அறுபதம் - வண்டுகள், போதென்று - புஷ்பமென்று, எழு - அடைகின்ற, பதம் - திருவடிகளை, சேர்ந்து - சரணாக அடைந்து உய்வதல்லால் - பிழைப்பதல்லாமல், உமக்கு - உங்களுக்கு, உய்யு முபாயம் - பிழைக்கு முபாயவழி, மற்றென்றில்லை - வேறொன்றில்லை - (எ - று).

ஒன்றறி யீர்முழு தும்முணர்ந் தீருணர் வொன்றுமில்லா
வன்றறி போல்பவர் வந்தும்மைத் தாழ்ந்திடின் மற்றவர்க்கு
நன்னெறி ஞானங் கொடுத்துண்மை காட்டுதிர் நாமுமிவ்வா
றென்றறி யாதவ ரெம்பெரு மானெனுக்க விச்சிப்பரே. 77

(இ - ள்). உணர்வொன்று மில்லா - அறிவொன்று மில்லாத, வன்றறி - வலிய தறியை, போல்பவர் - ஒப்பவர்கள், வந்து-அடைந்து, உம்மை-நும்மை, தாழ்ந்திடின் - வணங்கினால், மற்றவர்க்கு - அத்தன்மையோர்க்கு, நன்னெறி - நல்லமார்க்கத்தினடக்கும், ஞானம் - ஞானத்தை, கொடுத்து - அரு

ளிச்செய்து, உண்மை - உண்மைப் பொருளையும், காட்டுதிர் - அறிவிப்பீர், நாமும் - யாமும், இவ்வாரென்று - இப்படியிருக்கக் கடவோமென்று, அறியாது - தெரியாமல், அவர் - அவர்கள், எம்பெருமான் - எமது பெருமானே, ஒக்க - உமக்கொப்பாக, இச்சிப்பர் - விரும்புவராதலின், முழுதும் உணர்ந்தீர், முழுது முணர்ந்தவரோ, ஒன்றறீயீர் - ஒன்றுமறீயீர் - (எ - று). ஒன்றென்பதனோடு உண்மையைச் சேர்க்க நீர் ஒன்று மறியீரென்பது பழிப்பதுபோற் புகழ்தலாம்.

இச்சிந னேபுவ னத்திரு நாயக னென்றெவர்க்கு
நிச்சய மாகவு ணர்த்துதற் காக நிலாவிரித்து
மூச்சக முற்று நிழல்செய முப்புவ னேந்திரராந்
தச்சர் சமைத்துடன் வைத்தனர் நாதன்முச் சத்திரமே. 78

(இ - ள்). இச்சிநனே - இந்த ஜிநேசுவரரே, புவனத்திருநாயகனென்று - மூன்றுலகத்திற்கு முயர்வு பொருந்திய சுவாமி யென்று, எவர்க்கும் - யாவருக்கும், நிச்சயமாக - பின்னும் நிச்சயமாக, உணர்த்துதற்காக - தெரிவிப்பதற்காகத்தான்- நிலா - சந்திரிகையை, விரித்து - பரப்பி, முச்சக முற்றும் - மூன்றுலகங்களினிட மெல்லாம், நிழல் செய - குளிர்ச்சியை யுண்டாக்க, முப்புவனேந்திரராம் - மூன்றுலக இறைவராகிய, தச்சர் - தச்சர்கள், நாதன் - சுவாமிக்கு முச்சத்திரம் - மூன்று குடைகளை, சமைத்து - உண்டாக்கி, உடன் - அப்போதே, வைத்தனர் - வைத்தார்கள் - (எ - று). புவனத்திரர்களையும் தச்சர்களாக உருவகஞ் செய்தார்.

சத்திய மேயொன்று சாற்றுகின் றேன்சம யங்களெல்லாம்
கத்தியஞ் ஞானங் கவல்கின்ற தேகடைச் சாரமெய்து
முத்தியு மேக முதல்வனு மேக முதல்வனுமுற்
பத்தியு நாசமு மொன்றுமில் லாத பரஞ்சுடரே. 79

(இ - ள்). சத்தியம் - சத்தியமாகிய, ஒன்று - ஒரு வார்த்தையை, சாற்றுகின்றேன் - சொல்லுகின்றேன், சமயங்களெல்லாம் - எல்லாச் சமயங்களும், அஞ்ஞானம் - அஞ்ஞானமாய், கத்தி - ஒருவருக்கொருவர் மாறுபடப்புலம்ப, கவல்கின்றதே - கவலைப்படுகின்றதே, கடைச்சாரம் - முடிவில், எய்தும் - பெறுகின்ற, முத்தியும் - மோக்ஷமும், ஏகம் - ஒன்றே, முதல்வனும் - ஈசுரரும், ஏகம் - ஒன்றே, முதல்வனும் - ஒவ்வொன்ருகிய ஈசுரரும், உற்பத்தியும் - பிறப்பும், நாசமும் - மரணமுமாகிய இவற்றில், ஒன்றுமில்லாத - யாதொன்றுமில்லாத, பரஞ்சுடர் - ஒப்பற்ற ஜோதியாயிருக்கின்றவராம் - (எ - று).

சுடர்மண் டலஞ்சுர துந்துபி தெய்வத் துவனிசிங்கப்
பிடர்மண் டலவணை பிண்டிவெண் சாமரை பெய்மலரி
னடர்மண் டலமழை யம்பொற் குடைமும்மை யாமடியோ
மிடர்மண் டலம்கெடுப் பார்க்கிமை யார்செயு மெண்சிறப்பே. 80

(இ - ள்). அடியோம் - அடிமை செய்யும் யெம்போல் வாரது, மண்டலம் - கூட்டமாகிய, இடர் - துக்கத்தை, கெடுப்பாற்கு - ஒழிக்கின்ற அருகபரமே சுரருக்கு, இமையோர் - தேவர்கள், செயும் - செய்கின்ற, எண் சிறப்பு - எண் வகைச் சிறப்புகளாவன, சுடர் மண்டலம் - பிரபாவலயமும், சுரதுந்துபி - தேவ துந்துபியும், தெய்வத்துவனி - திவ்யத் தொனி

யும், சிங்கப்பிடர் - சிங்கத்தின் பிடரியில் நிர்மிக்கப் பட்ட, மண்டலம் - விருத்தமாகிய, அணே - ஆசனமும். பிண்டி - அசோக விருக்ஷமும், வெண் - வெண்மை பொருந்திய, சாமரை - சாமரமும், பெய் - சொரி கின்ற, மலரின் - புஷ்பங்களினது, அடர் - நெருங் கிய, மண்டலம் - சமூகமாகிய, மழை - வருஷமும், அம் - அழகிய, மும்மை - மூன்ருகிய, பொன் - பிரகாசமுள்ள, குடையாம் - குடையுமாகிய இவை களாம் - (எ - று).

சிறப்பின்றிவ் வாழ்வென்று தேவேந் திரர்தொழுந் தீர்த்தநின்சீர்
மறப்பின்றி யேயென்றும் வாழ்த்தப்பெற் ருன்மனே யானவற்றுக்
கறப்பின்றி யாயிழை யாரின்றி யேசென் றடைபவர்க்கோ
ரிறப்பின்றி யேவெளி யாய்நின்ற வீடெமக் கென்செய்கவே. 81

(இ - ள்). இவ்வாழ்வு - இந்த வாழ்வானது, சிறப்பின்று - சிறப்பில்லே, என்று சொல்லி, தேவேந்திரர் - தேவேந்திரர்கள், தொழும் - வணங்கு கின்ற. தீர்த்த - சுவாமியே நின்சீர் - நுமது அனந்தமாகிய கீர்த்திகளே, மறப்பின்றியே - மற வாமல், என்னும் - எப்பொழுதும், வாழ்த்தப் பெற் ருல் - துதிக்கப் பெருவோமாயின், மனேயான வற் றுக்கு - இல்வாழ்க்கைக்கு, அற - மிகவும், பின்றி - தூரமாய், ஆயிழையார் - ஆராய்ந்து அறிதற்கு ஆப ரணங்களேயுடைய மாதர்கள், இன்றியே - இல்லா மலே, தானே, சென்றடைபவர்க்கு - வந்தடைப வர்க்கு, ஓரிறப்பின்றி - ஓர் தடையுமில்லாமல், வெளி யாய் நின்ற - கண்ணிற்குப் புலப்படாது நின்ற, வீடு -

மோக்ஷஸ்தானம், எமக்கு - எங்களுக்கு, என் செய்க- என்ன செய்தற்கு வேண்டியது - (எ - று).

என்செய லாம்வினை காளுமக் கெங்களை யாம்பிறர்போ
லின்செய வாயவர் கேள்வரைத் தேவரென் றீண்டறமாக்
கொன்செய வேண்டுங் குபதரல் லோங்குடை மூன்றுடையார்
தன்செய பாதங்கள் கண்டுகொள் ளீரென் றலைமிசையே. 82

(இ - ள்). வினைகாள் - வினைகளே, உமக்கு, உம்மால், எங்களை - எம்மை, என் செயலாம் - என்ன செய்யக்கூடும், யாம் - நாங்கள் - பிறர்போல் - மற்றைப் பொய்ச் சமயத்தார்போல், இன் - இனிப்பும்- செய, சிவப்பும் பொருந்திய, வாயவர் - வாய்களை யுடைய மாதர்களுக்கு, கேள்வரை - கணவராயிருக்கின்ற வரை, தேவரென்று மெய்த்தேவரென்று ஈண்டு - இவ்விடத்தில், அறமா - தர்மமாக. கொன் - பயனில்லாத காரியத்தை, செயவேண்டும் - செய்ய விரும்புகின்ற, குபதரல்லோம் - மூடர்களல்லோம், குடை மூன்றுடையார் - முக்குடையையுடைய அருகபரமரது, செய - பாவத்தைப் போக்கும் வலியுள்ள, பாதங்கள் – பாதங்களை, என்றலைமிசை - எமது தலைகளின் மேலிருக்க, கண்டுகொள்ளீர் - பார்த்துக் கொள்ளுங்கள் - (எ - று). தம் - சாரியை வரவேண்டுமிடத்து எதுகை பற்றித் தன் சாரியை வந்தது.

மிசையார் தசையிருண் மேவார் நறைமது விண்பெறினு
மிசையார் கொலைபொய் களவறி யாரிளந் தோகையர்மாட்
டிசையார் பொருள்வரைந் தைவரைப் பேணுவ -ரைம்புலன்மே
னசையா ரியபிண்டி யாரடி யாரெங்க ணாயகரே. 83

(இ - ள்). தசை - மாமிசத்தை, மிசையார் - உண்ணார், இருள் - இராத்திரியில், மேவார் - உணவை விரும்பார், நறை - கள்ளிற்கும், மது - மத்தியத்திற்கும், விண்பெறினும் - சுவர்க்க லோகத்தைப் பெருவதாயிருந்தாலும், இசையார் - பானம் பண்ண உடன்படார், கொலை - கொல்லுதல், பொய் - பொய், களவு திருட்டு ஆதிய இவைகளை, அறியார் - அறிந்தேயிலர், இள - இளமை பொருந்திய, தோகையர் மாட்டு - மாதர்கள் விஷயமாக அசையார் - மனஞ்சலியார், பொருள் - தர்மமாக தேடிய பொருளை, வரைந்து - பெற்றுக் கொண்டு, ஐவரை - பஞ்சபரமேட்டிகளை, பேணுவர் - உபசரிப்பார்கள், ஐம்புலன்மேல் - பஞ்ச விடயங்களின்மேல், நசை - செல்லுமாசை, ஆறிய - அடங்கிய, பிண்டியார் - அசோக விருக்ஷத்தையுடைய அருகபரமரது, அடியார் - பக்தர்களாகிய, எங்கள் - எங்களுக்கு, நாயகர் - நாதராயிருக்கின்றார்கள் - (எ - று).

நாயகத் தேவர்த நன்முதற் றேவரை நாண்மலர்வான்
மீயகத் தேவர மேற்கொள்ளுந் தேவரை மெய்யடியார்
வாயகத் தேவரும் வண்புகழ்த் தேவரை மாற்றிநெஞ்சே
நீயகத் தேவரை யித்தனை நாளு நினைத்தனையே. 84

(இ - ள்). நாயகத் தேவர்தம் - தேவேந்திரர்களுக்கும், நம் - நமக்கும், முதற்றேவரை - முதலாயிருக்கின்ற கடவுளை, நாள் - அன்றலர்ந்த, மலர், புஷ்பமானது, வான் - ஆகாயத்தினது, மீயகத்தே - மேலிடத்தில், வர - எய்த, மேற்கொள்ளும் - அதன் மேலெழுந்தருளுகின்ற, தேவரை - சுவாமியை-

மெய் - உண்மை பொருந்திய. அடியார் - அன்பர்களுடைய, வாயகத்து - நாவினிடத்தில், வரும் - உண்டாகாநின்ற, வள் - வளப்பமாகிய, புகழ் - புகழையுடைய தேவரை - இறையவரை மாற்றி - மறுத்து நெஞ்சே - மனமே, நீ - நீ, அகத்து - மனதில், ஏவரை - எந்தத் தேவர்களை, இத்தனைநாளும் - இத்தனை நாள் வரைக்கும், நினைத்தனை - உயர்வாக எண்ணினை - (எ - று).

நினைத்தனை யாயினும் வாழ்த்தினை யாயினு நீயுநெஞ்சே
தினைத்துணை நல்லறஞ் செய்தனை யாயினுஞ் சேர்ந்தவரைப்
பினைத்தனை வந்தனை செய்யவொட் டாப்பிண்டி யாற்கரிதோ
வுனைத்தனை யேயொக்க வித்தனை நாளி லுயர்த்துகையே. **85**

(இ - ள்). நெஞ்சே - நெஞ்சமே, நீயும் - நீயும், தினைத்துணை - தினையளவு நினைத்தனையாயினும் - பிறரை வணங்காமல், அருகபரமே சுரரை நினைத்தாயாயினும், வாழ்த்தினையாயினும் - துதித்தாயாயினும், நல்லறம் - நல்ல தர்மத்தை, செய்தனையாயினும் அது போதும், சேர்ந்தவரை - தம்மை அடைந்தவரை, பினை - அதற்குப் பின்பு, தனை - தம்மை, வந்தனை செய்யாவொட்டா - வணங்கவொட்டாத, பிண்டியாற்கு - அசோகவிருக்ஷத்தையுடைய அருகபரமர்க்கு, உனை - உன்னை, தனை - தமக்கு, ஒக்க - ஒப்பாக, இத்தனை நாளில் - சிறிது நாளைக்குள், உயர்த்துகை - உயர்த்துவது, அரிதோ - அரிதாகுமோ - (எ - று).

கைத்துக் கடிதடுங் காஞ்சிரந் தின்பவன் றீங்கனியைத்
துய்த்துச் சுவைகண்ட பின்விடு மோசுர ராய்நரரோ
டொத்துத் திரிபவர்க் கன்புசெய் வாரும துண்மைகண்டால்
வைத்துப் பிரிவர்க ளோபிண்டி நீழலெம் மாமணியே. 86

(இ - ள்). கைத்து - கசந்து, கடிது - சீக்கிரத்தில், அடும் - கொல்கின்ற, காஞ்சிரம் - எட்டிக்காயை, தின்பவன் - தின்கின்ற வொருவன், தீம் - தித்திப்பாகிய, கனியை - மாங்கனி முதலானவற்றை, துய்த்து - சாப்பிட்டு, சுவை - உருசியை, கண்டபின் - அறிந்தபின், விடுமோ - அவைகளை தின்னுமல் விடுவானே, சுராராய் - தேவர்களென்கிற பெயர் கொண்டு, நரரோடு - மனிதர்களோடு, ஒத்து - தன்மையா லொத்து, திரிபவர்க்கு - திரிகின்றவர்களுக்கு, அன்பு - பக்தி, செய்வார் - செய்கின்றவர்கள் - உமது - தேவரீரது, உண்மை - தெய்வத்தன்மையை, கண்டால் - அறிந்தால், வைத்து - அதைப் புறம்பாக நினைத்து, பிரிவர்களோ - வேறு மார்க்கத்திற் செல்வரோ, பிண்டி - அசோக விருக்ஷத்தினது, நீழல் - நிழலின் கீழெழுந்தருளிய, எம் - எமது, மா - பெருமை பொருந்திய, மணியே - இரத்தினமே. (எ - று). தன்மையா லொத்தலாவது கொலைகளவியற்றலும் மகளிரைப் புணர்தலுமாம்.

மணியா பரணமு மாசில்வண் டுசும்பவம் பார்மலரு
மணியா தழகிய வண்ணல்கண் டீர்பெண்ணி னுசைவிடாப்
பிணியார் முடையுடற் பேயனை யீர்பிறழ் பூங்கரும்பின்
றிணியார் வரிசிலைத் தேங்கணைக் காமனைச் செறறவரே. 87

(இ - ள்). பெண்ணினுசை - மாதர்கள் மேல் கொண்ட மோகத்தை, விடா - விடாத, பிணி - நோயா

னது, ஆர் - நிறைந்திருப்பதினல், முடை - தீ நாற் றத்தை, உடை-உடைய, பேயனையீர்-பேயையொத்த மனிதர்களே, பிறழ் - பிரகாசிக்கின்ற, பூ - பூவினை யுடைய, கரும்பின் - கரும்பாகிய, திணியார் - வலி பொருந்திய, வரி - நீண்ட, சிலை - வில்லையும், தேம் - வாசனை பொருந்திய, கணை - அம்புகளையுடைய, காமனை - மன்மதனை, செற்றவரே - வென்ற அருகக் கடவுளே, மணி - இரத்தினங்களிழைத்த, ஆபரண மும்-ஆபரணங்களும், மாசில்-களங்கமில்லாத வண்- உயர்ந்த, தூசும் - ஆடையையும், வம்பார் - வாசனை பொருந்திய, மலரும் - புஷ்பங்களையும், அணியாது - தரிக்காமலேயே, அழகிய - அலங்காரமுள்ள, அண் ணல் கண்டீர் - இறைவராவார். (எ - று).

செற்றது காதிக டீர்ப்பத காதிக டிக்கறியப்
பெற்றது கேவலம் பேசுதல் கேவலம் பெண்முதலாய்ப்
பற்றது தீர்த்தவெம் பாவனை தீர்த்தவெம் பாவமற்ரு
லற்றதுன் மேற்றுதி யாரையு மேற்றுதி யாட்படினே. 88

(இ - ள்). செற்றது - உன்னல் கெடுக்கப்பட்ட வைகள், காதிகள் - காதிகன்மங்களாம், தீர்ப்பது - இனித் தீர்க்கப்படுவன, அகாதிகள் - அகாதிகன் மங்கள், திக்கறிய - உலகமறிய, பெற்றது - பெற் றுக் கொண்டது, கேவலம் - கேவல ஞானம், பேசு தல் - நீருளிச் செய்தது, கேவலம் - முத்தி மார்க்க மாகும், பெண்முதலாம் - பெண்கள் முதலாகிய, பற்றது - ஆசைகளை, தீர்த்த - நீக்கிய, எம் - எமது, பாவனை - பாவனைக் கிசைந்திருக்கின்ற, தீர்த்த - சுவாமியே, எம் - எம்முடைய, பாவம் - பாவமானது,

அற்றால் - நீங்கினால், உன்மேற்றுதி - நின்னைத்துதித்தல், அற்றது - தவிரா நின்றது, ஆட்படின் - உமக்கடிமைபுகின், யாரையும் - யாவரையும், ஏற்றுதி - உயர்த்துகின்றீர். (எ - று)

படினும் படார்தவம் பாத்துண் பதுமிலர் பார்த்திபரீர்ந்
தடினு மடாதன செய்கையஞ் சாரடி யார்தமன்பு
கெடினுங் கெடாவருட் கேவலி போலயற் றேவர்நல்கார்
விடினும் விடார்கண்மித் தாக்கள்கர்த் தாக்கள்கோல வெவ்வினைக்கே. 89

(இ - ள்). மிச்சத்தர்கள் - மித்தியா திருஷ்டிகள், படினும் - தவஞ்செய்வார்போல வேடங்கொண்டாலும், தவம்படார் - நல்ல தவத்துறையிற் புகார், பாத்து - முனிவர் முதலாகிய சத்கர்மத்தை யுடையவர்க்குப் பகுத்து கொடுத்து, உண்பதுமிலர் - பின்பு தாமுண்ணுதலுமிலர், பார்த்திவர்-அரசர்கள், ஈர்ந்து - தமதுடலைப் பிளந்து, அடினும் - கொன்றாலும், அடாதன - தருமத்திற்கு அடாதனவென்று விலக்கப்பட்ட கொலை களவு காமம் முதலிய தீமைகளை, செய்கை - செய்தற்கு, அஞ்சார் - பயப்படார், அடியார்தம் - அடியவர்களது, அன்பு கெடினும் - பக்தி குறையினும், அருள் - அருள் செய்வதில், கெடா - தாழாத, கேவலிபோல் - ஒப்பற்ற அருகபரமரைப் போல், அயற்றேவர் - இதர தெய்வங்கள், நல்கா விடினும் - பயனைத் தராவிட்டாலும், விடார்கள் - அவர்களை விடார்களாதலால், வெவ்வினைக்கு - கொடிய வினைகளுக்கு, கத்தர்கள் - தலைவர்களாயிருக்கின்றார்கள். (எ - று). அறநெறியில் வழுவி நடப்பாரைத் தண்டித்தல் அரசருக்கு உரிய தொழிலாதலால் பார்த்திவரீர்ந்தடினு மென்றார்.

வினைவரு மாறு மவைவெல்லு மாறுமித் தாச்சமயத்
தனைவரு மாறு கொளநிற்கு மாறு முலகமெல்லாம்
நினைவரு மாறு பொருணிற்கு மாறு நிறைந்த நன்னூற்
புனைவரு மாறு புகுகடல் போலுமெம் பூரணனே. 90

(இ - ள்). வினை - நல்வினை தீவினைகள், வருமாறும் - வரும் வழியும், அவை - அவற்றை, வெல்லுமாறும் - ஒழிக்கின்ற வழியும், மித்தைச் சமயத்து - பரசமயங்களி லிருக்கின்ற, அனைவரும் - எல்லாரும், மாறுகொள நிற்குமாறும் - ஒருவருக்கொருவர் மாறுபாடுகொண்டு நிற்கும் வழியும், உலகமெலாம் - எல்லா உலகத்திலும், நினைவரும் - நினைத்தற்கரிய, ஆறுபொருள் - ஜீவாதி பொருள் ஆறுபதார்த்தங்களும், நிற்குமாறும் - நிற்கின்ற வழியும், நிறைந்த - ஆகிய இவைகள் நிறைந்த, நன்னூல் - நன்மை பொருந்திய பரமாகமமாகிய, புனைவரும் - அழகு பொருந்திய, ஆறு - நதியானது, புகு - புகாநின்ற, கடல்போலும் - கடலுக்கு சமானமாவார், எம் - எமது, பூரணன் - எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளாகிய அருகபரமர் :—(எ - று).

பூரணை யாற்பதி னாற்கயிற் றொக்கப் புவனமெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்தசிங்கப்
பேரணை யார்க்கிணை யாருமில் லாப்பெரியோர்க்கு விண்ணோர்
பாரணை யாவடி தாங்கச்செந் தாமரை பாரித்ததே. 91

(இ - ள்). நிவந்த - உயர்ந்த, சிங்கம் - சிங்கத்தால் தாங்கப்பட்ட, பேர் - பெரிய, அணையாற்கு - ஆஸனத்தை யுடைவர்க்கு, யாவரும் - எவரும், இணையில்லா - ஒப்பில்லாத, பெரியோற்கு - பெருமை பொருந்திய, அருகபரமர்க்கு, பார் - பூமியை,

அணையா - பரிசிக்காத, அடி - அவரது திருவடிகளை, தாங்க - தாங்குதற்கு, விண்ணோர் - தேவேந்திரர்கள், செந்தாமரை - சிவந்த தாமரைப் பூவை, பாரித்தது - பண்ணினது யாதுபோலுமெனின், பூரணையால், நிறைவாயிருத்தலால், பதினல்கயிற்று - பதினான்கு கயிற்றினளவு, ஒக்க - உயரமாகி, புவனமெல்லாம் - எல்லா புவனங்களையும், நீர் - குணம்பொருந்திய, மாருதம் - காற்றானது, தாங்கிய தொக்கும் - தாங்கி யிருத்தல்போலும்:—(எ - று). குணமென்றது குளிர்ச்சி, மண முதலானவைகளை.

பாரிடை யீரிரு நூற்றைம்பத் தெட்டுபத் தாம்பவணத்
தோரேழு கோடியெண் ணேன்பா னிலக்க முயர்ந்தகற்பத்
தோரியல் யோனிதொள் ளேழா யிரச்சின்ன மெண்ணவெண்ணு
சீரிய வந்தரர் சோதிடத் தீசர்நற் சேதியமே. 92

(இ - ள்). ஈசர் - ஜிநேந்திரரது, நல் - நல்ல, சேதியம் – இயற்கையாகிய ஆலயங்கள், பாரிடை - பூமியில், ஈரிருநூற்றைம்பத்தெட்டு - நானூற்றைம்பத் தெட்டு, பத்தாம் - பத்தடுக்கா யிருக்கின்ற, பவணத்து - பவணலோகத்தில், ஓரேழுகோடி யெண் ணெண்பானிலக்கம் - ஏழுகோடியே எழுபத்திரண்டு நூறாயிரம், உயர்ந்த - சிறந்த, கற்பத்து - தேவ லோகத்தில், ஓர் - ஒப்பற்ற, இயல் - தன்மையுடைய, யோனித்தொண்ணேழாயிரச் சின்னம் - எண்பத்து நான்கு நூறாயிரத்துத் தொண்ணூற்றேழாயிரத் திருபத்துமூன்று, சீரிய - கீர்த்தி பொருந்திய, அந் தரர் - வியந்தர லோகத்திலும், சோதிடத்து - ஜோதிட லோகத்திலும், எண்ணவொண்ணு - இவ்

வளவென்று எண்ணமுடியாவாம் :—(எ - று). தொண்ணூற்றேழாயிரமென்பது தொண்ணேழாயிர மெனத் திரிந்தது. சின்னமென்பது இருபத்து மூன்றென்னும் குறைந்த எண்ணைக்காட்ட வந்தது. அதற்குமுன் தொண்ணூற்றேழாயிரமென்று சொன்னபடியால் என்க. யோனி - என்னுங் குறிப்பு, மொழியால் எண்பத்து நான்கு நூரு யிரத்தை வருவிக்கவாம்.

சேதிய முப்புவ னத்திரு கூற்றமுந் தீர்த்தருள்ளிட்
டேதில் குணத்தர் வணக்கமோ ரைந்து மியற்பெயரோ
டாதி யெழுத்து மருகனு மவ்வுமோன் ருதியைந்தீ
ருேதி நினைப்பன் வினைத்துக ளோடி யொளித்திடவே. 93

(இ - ள்). முப்புவனத்து - மூன்றுலகங்களி லிருக்கின்ற, இருகூற்றமும் - இயற்கை செயற்கை இருவகையாகிய, சேதியம் - ஆலயங்கள்தோறும் வீற் றிருக்கின்ற, தீர்த்தருளிட்டு - அருகதேவரையுள் ளிட்டு, ஏதில் - குற்றமில்லாத, குணத்தர் - குணங் களைப் பெற்ற பஞ்சபரமேஷ்களுடைய, வணக்க மோரைந்தும் - ஒப்பற்ற பஞ்ச நமஸ்காரங்களும், இயற்பெயரோடு அருகர், அசரீரி, ஆசிரியர், ஆகிய இவ்வியற்கைப் பெயர்களிலே, ஆதி எழுத்தும் - முதலெழுத்துகளும், அருகனும் உபாத்தியாயரின் முதலெழுத்தாகிய உகரமும், மவ்வும்-முனிவர்களின் முதலெழுத்தாகிய மகரவொற்றும் எனப்படுகின்ற இவைகளை, ஒன்ருதி - ஒன்று முதலாய் ஐந்திறுதி யாகச் சொல்லுவதனுலுண்டாகிய ஓங்காரத்தை, அந்தி - முச்சந்தியுலும், ஓதி - துதித்து, நினைப்பன் -

தியானிப்பேன், வினை - வினைகளாகிய, துகள் - தூளிகள், ஓடி - என்னைவிட்டு நீங்கி, ஒளித்திட - ஒளிக்கும் பொருட்டு. (எ - று).

ஒளிவந்தநீழ லுயர்பிண்டி வேந்த னொருத்தனுமே
விளிவந்து வேண்டும் விபூதிக ணல்குமெய்ப் பொய்யைநம்பிக்
களிவந் தவாவொடு கைவந்த வாசெய்யுங் கையர்பின்போ
யிளிவந்து வாழ வருமந்த வாருயிர்க் கென்வந்ததே. 94

(இ - ள்). ஒளிவந்த - பிரகாசம் பொருந்திய, நிழல் - நிழலையுடைய, உயர் - உயர்ந்த, பிண்டி - அசோக விருக்ஷத்தின்கீழ் வீற்றிருக்கின்ற, வேந்தனொருத்தனுமே - சுவாமியாகிய அருகபரமரொவருமே, விளிவந்து - கூப்பிடவந்து, வேண்டும் - பக்தர்கள் விரும்பிய விபூதிகள்-பாக்கியங்களை, நல்கும் - கொடுப்பார், பொய்யை - பொய்யாகிய, மெய் - உடலை, நம்பி - நிலையுள்ளதென நம்பி, களிவந்து - செருக்கடைந்து, அவாவொடு - ஆசையோடு, கைவந்தவா - தாம் வேண்டியவாறு, செயும் - செய்கின்ற, கையர் பின்போய் - தீயர்கள் பின்னாகப்போய், இளிவந்து - இகழ்ச்சியை யடைந்து, வாழ - வாழும்படியாக, அருமந்த - அரிதாகிய அமிர்தம்போன்ற, ஆருயிர்க்கு - பெறுதற்கரிய உயிர்க்கு, என்வந்தது - என்ன தீவினை நேரிட்டது :—(எ - று).

வந்தன வெண்ணரை போயிற்று வாய்மக்கள் யாக்கைபெற்று
நந்தன மாவொன்று நாடிற்றி லம்பிண்டி நாதனைச்சேர்ந்
துய்ந்தன மின்றுபண் டோதனந் தின்றின்சொ லார்தனஞ்சேர்த்
திந்தன மாகநற் சந்தண வேர்பெற் றெரித்தனமே. 95

(இ - ள்). வெள் - வெளுப்பாகிய, நரை - நரை யானவை, வந்தன - சம்பவித்தன, உவா - இளமை யானது, போயிற்று - நீங்கிற்று, மக்களியாக்கை - மக்களுடம்பை, பெற்றும் - அடைந்தும், நம் - நம் முடைய, தனமா - உரிய பொருளாக, ஒன்றும் - ஒன்றையும், நாடிற்றிலம் - தேடாமல் போய்விட் டோம். இன்று - இப்பொழுது, பிண்டி - அசோக விருக்ஷத்தின் கீழ் வீற்றிரா நின்ற, நாதனை - சுவா மியை, சேர்ந்து - சரணாக அடைந்து, உய்ந்தனம் - பிழைத்தோம், பண்டு - முற்காலத்திலோ வென்றால், ஓதனம் - விருப்பத்தை யதிகப்படுத்துகின்ற சோற்றை, தின்று - புசித்து, இன்சொலார் - இனிப் பாகிய பேச்சினையுடைய மாதரது, தனம் - கொங் கையை, சேர்ந்து - புணர்ந்து, இந்தனமாக - விற காக, நல் - நல்ல, சந்தணவேர் பெற்று - சந்தண வேரைப் பெற்று, எரித்தனம் - வீணாக எரித்தோம்: —(எ - று). விருப்பத்தை மிகுவிக்கின்ற நெய்யோடு சேர்ந்த சோற்றினை ஓதனமென்றார்.

எரிதின்று போத லிழுப்புண்டு போதலின் நாயொடுபேய்
நரிதின்று போதலல் லான்மெய் நில்லாநமன் றூதர்வந்தா
லரிதின்று போதுத லென்னவொண் ணுதத னுக்குமுன்னே
கரிதின்றி டாவரி யேந்தணை யானறங் கைக்கொண்மினே. 96

(இ - ள்). எரி - நெருப்பினால், தின்று - எரிக் கப்பட்டு, போதல் - ஒழிதலும், இழுப்புண்டுபோதல் - உரியவரில்லாமல் கண்டவரால் இழுத்தெரியப்படுத லும், இந்நாயொடு - சுசியில்லாத சாதாரணமான நாய்களுடனே, பேய் - பேய்களும், நரி - நரியும்

தின்றுபோதல் - உண்ணக் கெடுதலும், அல்லால் - அல்லாமல், மெய் - தேகமானது, நிலா - ஸ்திரமாயிருக்காது, நமன் - யமனுடைய, தூதர்வந்தால் - தூதர்கள் தம்மையடைந்தால், இன்று - இப்போது, போதுதல் - உம்மோடு வருதல், அரிது - கூடாது, என்னவொண்ணுது - என்று சொல்லப்படாது. அதனுக்கு முன்னே - அப்படியந்த யமபடர்கள் வருதலுக்கு முன்னே, கரி - யானையை, தின்றிடா - தின்னுத, அரி - சிங்கத்தால், ஏந்து - தாங்கப்பட்ட, அணையான் - ஆசனத்தையுடைய அருகபரமது, அறம் - தர்மத்தை, கைக்கொண்மின் - கைக்கொள்ளுங்கள்:—(எ - று).

கொண்மூ வொருபரு வம்பொழிந் தாங்கிரு கொப்பினுட்பா
ருண்மூ விருவகைச் காலத் திடையுல குய்யக்கொள்ளு
மெண்மூ வருமல்ல தீசரல் லாமைநல் லீசரென்று
திண்மூ டர்கடொழுந் தேவர் மெய்காட்டித் தெளிவிப்பரே. 97

(இ - ள்). கொண்மூ - மேகமானது, ஒருபருவம் - ஒரு காலத்தைக் குறித்து, பொழிந்தாங்கு - பெய்தாற்போல், இருகொட்பின் - உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணியாகிய சுழற்சியையுடைய, பாருள் - பூமியில், மூவிருவகைக் காலத்திடை - அறுவகைக் காலத்து மத்தியில், உலகு - உலகத்தை, உய்யக்கொள்ளும் - பாதுகாக்கின்ற, எண்மூவருமல்லது - இருபத்துநாலு தீர்த்தர்களே யல்லாமல் ஈசரல்லாரை - தலைவரகளல்லாதவரை, நல் - நல்ல, ஈசரென்று - கடவுளென்று, திண் - உறுதி கொண்டிருக்கின்ற, மூடர் - அறிவிலிகள், தாள் - பாதங்

களை, தொழும் - தொழுகின்ற, தேவர் - தேவர்கள். மெய் காட்டி - தமது தேகத்தைக் காட்டி, தெளிவிப்பர் - அறிவிப்பர் :—(எ - று).

தெளிக்குந் திருமொழித் திக்குடைத் தொல்சக முக்குடைக்கீ
ழளிக்குந் திருவரு ளாழியெம் மானடி யைம்புலநீர்க்
குளிக்குந் திருளிதக் குற்றத்து மும்மதத் தெம்மனமாங்
களிக்குஞ் சரமணைக் கும்பணைத் தாளிணைக் கந்துகளே. 98

(இ - ள்). தெளிக்கும் - சந்தேகத்தை நீக்குகின்ற, திருமொழி - திருவாக்கினையும், திக்கு - திக்காகிய, உடை - ஆடையும், தொல் - பழமையாகிய, சகம் - உலகத்தை, முக்குடைக்கீழ் - மூன்று குடையின்கீழ், அளிக்கும் - பாதுகாக்கின்ற, திரு - அழகிய, அருளாழி - தர்மசக்கிரத்தையு முடைய, எம்மான் - எமதாண்டவராகிய அருகபரமர், அடி - திருவடிகள், ஐம்புலம் - ஐந்து விஷயமாகிய, நீர் - நீரிலே, குளிக்கும் - மூழ்குகின்ற, திரிவிதக் குற்றத்து - மூவகைக் குற்றங்களாகிய, மும்மதத்து - மூன்றுமதங்களையுடைய, எம் - எமது, மனமாம் - மனதாகிய, களி- செருக்கடைந்த, குஞ்சரம் - யானையை, அணைக்கும் - சேர்க்கின்ற, பணை - பருத்த, தாள் - அடியையுடையது, இணைக் கந்துகள் - இரண்டு ஸ்தம்பங்களாம் :— (எ - று).

கந்தா திகக்ளென் கசிந்தநெஞ் சாகக் கடிநறும்பூஞ்
செந்தா தியை பிண்டி யார்திருப் பாதத்துச் சேர்த்துமின்சொ
லந்தா தியையணி மாமல ராக வணிந்தடியேன்
முந்தாதி வல்வினை வெவ்வ னெல்லாரினு முந்துறவே. 99

இ - ள்). கந்தாதிகள் - கந்த முதலானவைகள், என் - என்னுடைய, கசிந்த - கசிவுற்ற, நெஞ்சாக -

மனதாக, கடி - மிகுந்த, நறு - வாசனையுடைய பூ - பூவினது, செந்தாது - சிவந்த தாதுக்கள், இயை - பொருந்திய - பிண்டியார் - அசோக விருக்ஷத்தின் கீழே யிருக்கும் பரமரது, திருபாதத்து - அழகிய திருவடிகளில், சேர்த்தும் - சேர்த்துச் சொல்லப்படுகின்ற, இன்சொல் - இனிய சொல்லையுடைய, அந்தாதியை - அந்தாதி யென்னும் பிரபந்தத்தை, அணி - அழகுபொருந்திய, மா - பெருமையுற்ற, மலராக - பூவாக, அணிந்து - தரித்து, அடியேன் - அடிமையாகிய யான், முந்தாதி - முற்காலத்திலுண்டாகிய வல்வினை - வலியவினையை, எல்லாரினுமுந்துர - எல்லாரைக் காட்டிலு மதிக்கப்பட, வெல்வன் - கெடுப்பேன் - (எ - று). முந்தென்பதும் ஆதி யென்பதும் ஒரு பொருட் கிளவி.

முந்திய பேரன்பின் மூவுல கேத்த முனீந்திரரோ
டெந்தை பிரானங் கெழுந்தரு ளும்பொழு தேறவங்கோர்
தந்தி பொறுதென்றும் வாசிபொறு தென்றுந் தாழ்வுடையேன்
புந்தி பொறுதென்றுந் தேவர் பொற்றுமரைப் பூக்கொண்டதே. 100

(இ - ள்). முந்திய - முற்பட்ட, பேர் - பெரிய, அன்பின் - அன்பினையுடைய, மூவுலகு - மூவுலகத்தி லுள்ளவர்கள், ஏத்த - துதிக்க, முனீந்திரரோடு - முனிகளும் இந்திரர்களுமாகிய இவர்களோடு, எந்தை - எமக்குத் தந்தையாகியும், பிரான் - தலைவராயுமிருக்கின்ற சுவாமி, அங்கு - அவ்விடத்தில், எழுந்தருளும்பொழுது - திருவுலாச் செய்யும்போது, ஏற - ஏற - ஆரோகணித்தற்கு, அங்கு - அவ்விடத்தில், ஓர்தந்தி - ஒருயானை, பொறுதென்றும் - தாங்க

வலியுள்ளதன்றென்றும், வாசி - குதிரை, பொரு தென்றும் - பொறுக்கமாட்டாதென்றும், தாழ்வுடையேன் - குற்றமுற்ற வடியேனது, புந்தி - மனம், பொருதென்றும் - பொறுக்கமாட்டா தென்றும் தான், தேவர் - தேவர்களால் நிர்மிக்கப்பட்ட, பொற்றாமரைப்பூ-பொற்றாமரைப் பூவின்மேல் கொண்டது-எழுந்தருளினது :—(எ - று).

நூற்பயன்

பூக்கொண்டு நாளும் புனிதன் றிருவறம் போற்றிநின்று
நாக்கொண்ட செஞ்சொ லவிரோதி நாத னவின்றநன்னூற்
பாக்கொண்டு நாளும் பணிந்து நினைந்தும் படிக்கவல்லார்
தீக்கொண்ட வல்வினை சேரார் சிவகதி சேர்பவரே. 101

(இ - ள்). பூ - மலர்களை, கொண்டு - கொய்துக் கொண்டு, நாளும் - நாள்தொறும், புனிதன் - அருகதேவரது, திருவறம் - தர்மத்திற் சொல்லிய விதியை, போற்றி நின்று - வழுவாமற் செய்து நின்று, நாக் கொண்ட - நாவினிடமாகக் கொண்ட, செஞ்சொல் - குற்றமற்ற சொற்களையுடைய, அவிரோதிநாதன் - அவிரோதிநாதர், நவின்ற - பாடியருளிய, நல் - நன்மை பொருந்திய, நூல் திருநூற்றந்தாதி யென்னும் நூலி லுள்ள, பா - பாடலை, கொண்டு - சிந்தித்து நாளும் - நாள்தோறும், பணிந்தும் - வணங்கியும், நினைந்தும் - சிந்தித்தும், படிக்கவல்லார் - படிக்க வல்லவர்கள். தீக்கொண்ட - தீமையைக்கொண்ட - வல்வினை - வலியவினைகளை, சேரார் - சேரமல், சிவகதி - மோக்ஷத்தை, சேர்பவர் - அடைவார்கள், (எ - று).

சிந்தாகுல மில்லைத் தீவினை போஞ்செய்ய தாமரையாய்
வந்தா தரிக்கு மடநெஞ்ச மேமற வாதிருக்கக்
கொந்தா ரலங்கற் குடையொரு மூன்றுடை யான்குணத்தை
யந்தாதி யாக வவிரோதி யோதிய வாகமமே. 102

(இ-ள்). மடம்-அறியாமையுடைய, நெஞ்சமே - மனமே, கொந்து - புஷ்பக் கொத்துகள், ஆர் - நிறைந்த, அலங்கல்-மாலையைத் தரித்த, குடையொரு மூன்றுடையான் - மூன்று குடைகளையுடைய அருக பரமேசுரரது, குணங்கள் - அனந்தக் ஞானுதிகுணங் கள், அந்தாதியாக - ஒரு செய்யுளினிறுதி மற்றோர் செய்யுளுக்கு முதலாகச் சொல்லுகின்ற அந்தாதி பிரபந்தத்தில் பொருந்தும்படி அவிரோதி - அவி ரோதி நாதர், ஓதிய - சொல்லியருளிய, ஆகமம் - ஆகமம் போன்ற திருமொழிகளை, மறவாதிருக்க - மறவாதிருந்தால், சிந்தாகுலமில்லை - துக்கமில்லை- தீவினைபோம் - தீய பாவங்கள் போம், செய்ய தாமரையாள் - சிவந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகள், வந்து - அடைந்து, ஆதரிக்கும் - சகல பாக்கியத்தையும் கொடுத்து ஆதரிப்பாள் —(எ - று).

திருநூற்றந்தாதி முற்றும்.

ஸ்ரீ ஜைனசித்தாந்த நூல் நிலையம்,

7, சுப்ரமணிய முதலி தெரு, சென்னை-1.

—:✻:—

நம்மிடம் சகலவிதமான ஜைனமத கிரந்தங்களும், மற்றும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.

பரதேஸ்வர வைபவம் என்கிற நூல், பாகங்களாக மொழி பெயர்த்து விரைவில் வெளிவரும்.

ஸ்ரீ ஜிநாய நம:

நேமிநாதம்

சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை

இந்த பத்திரிகையில் ஜைனமத சம்பந்தமான தத்துவங்களும் வரலாறுகளும் விரைவில் வெளிவரும் சந்தாதாரராக சேரவிரும்புவோர் இரண்டணு தபால் பில்லையுடன் விலாசம் தெரியப்படுத்தினல் முதல் பத்திரிகை இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

விஷயதானம் அனுப்புமவர்கள் முன்கூட்டியே அனுப்ப கோருகிறேன்.

ஸ்ரீ ஜைனசிந்தாந்த நூல் நிலையம்,
7, சுப்ரமணிய முதலி தெரு,
சென்னை-1.

பிரம்மசாரி
K. A. சூரியகோட்டி